www.padippakam.com



# தென்மொழி

## ஒழியட்டும் கொலைத் தண்டம்!

விழியெட்டுந் தொலைவெல்லாம்
    வீறார்ந்த கொடியுயர்த்திப்
    பதாகை தாங்கி
மொழியெட்டும் உள்ளுணர்வால்
    மக்களலை கடலெனவே
    முழங்கு கின்றார்
கழியட்டும் பழிவாங்கும்
    வெங்கொடுமை நெறிமுறைகள்
    கடிதின் முற்றும்
ஒழியட்டும் கொலைத்தண்டம்
    ஓங்கட்டும் மாந்தநேயம்
    உறுதி ஈதே! - இறை




...டி - 31
...லை - 12

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி.2030 சி...
(திசம்பர் - 19...


விலை [illegible] 5-00

படிப்பகம்

www.padippakam.com



## வெல்லாத ஆரியர் வென்ற கதைஇது!
## வீரத் தமிழினம் வீழ்ந்த இழிவிதே!

['திராவிடர்' என மயங்கித் தமிழர் தம்மை இழந்த வரலாற்றை விளக்குகிறது இப்பாடல்.]

தமிழம் திரிந்து சமற்கிரு தத்தில்
'திரமிளம்' ஆகித் 'திரவிடம்' நின்றது!
அமிழ்தாம் தமிழை அழித்துத் திராவிடம்
ஆக்கிய ஆரியத் தில்லு முல்லிது!
கமழும் மொழிப்பெயர் இனப்பெயர் அழிந்ததால்
கன்னித் தமிழும் தமிழரும் அழிந்தே
உமிழத் தக்க 'திராவிடர்' ஆயினர்!
உயிர்போய் விட்ட பிணமாய்க் கிடந்தனர்!

'திராவிடர்' எனும்சொ(ல்)லைத் தமிழர் தவிரத்
தெலுங்கரோ, கன்னட ரோ,மலை யாளரோ
பராவுதல் இல்லை; பயில்தலும் இல்லை!
பாழும் தமிழரே பயின்று வந்ததால்
திராவிடர் இருக்கத் தமிழர் அழிந்தனர்!
தமிழர் அழிந்ததால் தமிழுணர் வழிந்தது!
திராவிடர் எனும்சொல் கழகநூல் எதனினும்
தெள்ளிப் பார்க்கினும் தெரியவிய லாதே!

இல்லாத பெயரை இருப்பதாய்ச் சொல்லி
இருந்த பெயரை இழந்தனர் தமிழர்!
பொல்லாத ஆரியச் சூழ்ச்சியை அறியாப்
புழுக்கைத் தமிழரே தமிழரை அழித்தனர்!
எல்லாரும் தெலுங்கர் கன்னடர் மலையராய்
இருந்திடத் தமிழர் இல்லாது போயினர்.
வெல்லாத ஆரியர் வென்ற கதையிது!
வீரத் தமிழினம் வீழ்ந்த இழிவிதே!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்

படிப்பகம்

www.padippakam.com



# தென்மொழி

மொழி—இனம்—நாடு

நிறுவனம் : தி.பி. 1990(கி.பி. 1959)

நிறுவனர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி !

இந்தியா ஒன்றாக இருக்கும்வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும்வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப்பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகவே முடியாது. மதப்பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாத வரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையி னின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாத வரை, தமிழ்மொழி தூய்மை யுறாது. தமிழினம் தலை தூக்காது; தமிழ் நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப் பூசல்களி னின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டே யாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தென்மொழி'**
செந்தமிழ் அடுக்ககம், (சி.கே. பிளாட்சு)
மேடவாக்கம் கூட்டுச்சாலை – 601 302.
தொலைபேசி எண் : 239 0231

## உள்ளே.......


* தமிழ்வழிக் கல்வியும் அரசு ஆணையும்
* அலைகடலே யாரால் துன்புற்றாய் ?
* முறைப் பெயர்கள்
* நம்மை அடுத்துள்ள விண்மீன் மண்டலங்கள்
* கலகம்
* தமிழினத் தன் முடிவுரிமை
* முனைப்பு
* மதம்கொண்ட தமிழ்ப்பெயர்கள்
* இந்திய அரசியல் ஆட்டக் களமும் ஆரியப் பார்ப்பனர்களும்
* நல்ல முடிவு !
* செய்திகள்



## தென்மொழி வெளியீடுகள் கிடைக்கும் இடங்கள்

**நம் அரும்பெறல் ஐயா பாவலரேறு அவர்களின் நூல்கள் தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகத்தில் மட்டுமல்லாமல் கீழ்க்காணும் இடங்களிலும் விற்பனைக்குக் கிடைக்கும்.**

● **'இறையகம்'** 31, அப்பர்சாமி கோயில் தெரு, மயிலார்ப்பூர், சென்னை-4. ● **'தமிழ்நிலம்'** கணிப்பொறி இணையம், அறை எண்:2, 2-ஆம் தளம், 33, வெங்கட்டநாராயண சாலை, நந்தனம், சென்னை-35. ☎ 4337368 ● **தூழில் பதிப்பகம்,** 183, வெங்கட்டரங்கம் தெரு, சென்னை-5. ● **கீழைக் காற்று பதிப்பகம்,** 10,அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை-2. ● **விசயா பதிப்பகம்,** 20, அரச வீதி, கோவை-1. ● **தமிழோசைப் பதிப்பகம்,** 797-இ, சிறீராம்மோகன் வணிக வளாகம் சத்தி சாலை, காந்திபுரம் கோவை - 641 012. ● **அய்யனார் பொத்தக நிலையம்,** 4, தட்டிலி(டட்லி) மேனிலைப் பள்ளிக் கட்டட வளாகம், திண்டுக்கல்-1. ● **முற்போக்கு நூல்கள் விற்பனையகம்,** அ. செ. மாதவன் 3/139-சி, 3-ஆம் தெரு, இந்திரா நகர், தொழிற்பேட்டை, இராணிப்பேட்டை-632 403. ● **குழந்தை ஈகவரசன்** 'தென்மொழி இல்லம்' எல். ஐ.இச்சி. ஐ/657 அண்ணாநகர், திருச்சி-26


படிப்பகம்

www.padippakam.com



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

சுவடி:31) தி.பி. உ0ங0 - சிலை (திசம்பர்-'99) ஓலை. 12

# தமிழ்வழிக் கல்வியும் அரசு ஆணையும்

தமிழ்வழிக் கல்வித் தொடர்பாகத் தமிழ்நாட்டரசு அண்மையில் ஓர் ஆணையை வெளியிட்டுள்ளது. அவ்வாணையின் முகப்பில், மழலையர் பள்ளி உட்பட உயர்கல்வி வரை தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகச் செயற்படுத்தக் கோரித் தமிழ்ச் சான்றோர்கள் அரசின்முன் கோரிக்கை வைத்ததை யடுத்து நடுவர் எசு. மோகன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டதாகவும், அக்குழு தமிழ் அறிஞர்கள், பொதுமக்கள் ஆகியவர்களுடன் கலந்து பேசி அரசுக்குப் பரிந்துரை அளித்ததாகவும் அப் பரிந்துரைகளை அரசு கவனத்துடன் ஆராய்ந்ததாகவும், அப் பரிந்துரைகள்மீது தகுதிநிலைப்(Matriculation) பள்ளிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆகியவற்று வாரியங்களின் கருத்துகள் பெறப் பட்டதாகவும், அனைத்தையும் ஆய்வு செய்தபின் இவ்வாணை வெளியிடப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

அரசு ஆணையில் மழலையர் பள்ளிகள் பற்றியோ, உயர்கல்வித் துறைகள் பற்றியோ எவ்வகைக் குறிப்பும் இல்லை. தமிழ்வழிக் கற்றார்க்கு வேலை வாய்ப்புக் குறித்தும் அரசு கண்டுகொள்ளவில்லை.

தமிழ்ச் சான்றோர்களின் பட்டினிப் போராட்டத்தின்போது

> *"ஒன்று முதல் ஐந்து வகுப்புக்குரிய தொடக்கப் பள்ளிகள், நாடு முழுதும் பரவியுள்ள மழலையர் பள்ளிகள் தொடங்கித் தகுதிநிலைப்(Matriculation) பள்ளிகள் வரையில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும்* ***'தமிழ்' ஒன்றே*** *மொழிப் பாடமாகவும் பயிற்றுமொழியாகவும் இருக்க வேண்டுமென்ற கொள்கையில் தமிழ் அறிஞர்களுக்கும் தமிழக அரசுக்கும் எந்தவொரு கருத்து வேறுபாடும் கிடையாது. இக் கொள்கையை* ***நிறைவேற்றும்*** *வகையில் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு ஏப்பிரல் 30க்குள் ஒரு குழு அமைக்கப்படும். மே 31க்குள் குழுவினரிடமிருந்து பரிந்துரை அறிக்கை பெற்று வரும் கல்வியாண்டிலேயே அதனை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் அனைத்தையும் அரசு செய்யும்"*

என்று அரசு அளித்த உறுதிமொழியின்படியே, குழு அமர்த்தப் பட்டது. உச்சநெறிமன்ற நடுவராய் இருந்தபோது தமிழ் வழிபாட்டுரிமை தொடர்பான வழக்கில், திருக்கோயில்களில் சமற்கிருதமே வழிபாட்டு மொழியாய் இருக்கிறதென்றும், தமிழிலும்

படிப்பகம்

www.padippakam.com



தேவாரம் திருவாசகம் திருநாலாயிரம் முதலான தெய்வத்தன்மை பொருந்திய நூல்கள் இருப்பதால் தமிழ் வழிபாடு செய்யும் தகுதி பெற்ற பூசகர்கள் இருந்தால், வழிபடும் மக்கள் தமிழில் வழிபாடு செய்யும்படி கேட்டால் தமிழிலும் வழிபாடு செய்யலாம் என்றும் 'வெந்தயத்தை ஆட்டி விளக்கெண்ணெய் சேர்த்தது போல்' தீர்ப்பளித்துத் தமிழ்வழிபாட்டை இன்றளவும் முழுமையாகச் செயற் படுத்த இயலாமைக்கு வழிவகுத்த நடுவர் மோகன் தலைமையில் அக்குழு அமைந்தது.

'அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒன்றே மொழிப் பாடமாகவும் பயிற்றுமொழியாகவும் இருக்கவேண்டும் என்ற கொள்கையை நிறைவேற்றுதற்கான வழிவகைகளைக் கூற வேண்டிய அக்குழு, தமிழ்வழிக் கல்வி குறித்துப் பொதுமக்களிடம் கருத்தறிய முற்பட்டது. குழுவின் தலைவர் அதன் உறுப்பினர்களோடுகூட இதுபற்றிக் கலந்துகொள்ளாமல் ஒரு நாளைக் குறிப்பிட்டுப் பொது மக்கள் கருத்தறிவிக்கலாம் என்று அறிவித்தார். குழு உறுப்பினர்கள் உடன்படாமையால் நாள் மாற்றப்பட்டது.

இவ்வாறு பொது மக்கள் கருத்தறியும் நிலை பற்றி அக் குழு உறுப்பினர்களிடம் உசாவியபோது, அப்படிப் பொதுமக்கள் கருத்தறிவது சட்டப் பாதுகாப்புக்காகவே என்று தலைவர் கூறிய தாகவும் அதுவும் ஒருவகையில் நல்லதே என்றும் கூறினர். இம் முயற்சியில் ஈடுபட்டதாலேயே குழு அரசுக்கு அறிக்கை தருவதில் சுணக்கம் ஏற்பட்டது; அரசு அறிவித்தபடி நடப்புக் கல்வியாண்டில் தமிழ்வழிக் கல்வியைச் செயற்படுத்தாமல் தவிர்க்கவும் வாய்ப்பாய் அமைந்தது.

இனி, "அரசின் பயிற்றுமொழிக் கொள்கை குறித்து வெளியிடப் பட்ட அரசாணைகள் செல்லும் என்று வழக்குமன்றங்களால் முடிவு செய்யப்பட்டுள்ளதால் மொழிக் கொள்கைக்குச் சட்டமுறைப் படியான ஏற்பிசைவு அளிக்கப்பட வேண்டிய கட்டாயமில்லை' என அரசு கருதுவதாக அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்விநிலையைப் பொறுத்து அரசின் மொழிக் கொள்கை இன்னதென இதுகாறும் முறையாக வரையறுக்கப்படாமையால் வரையறையான சட்டமாக்கப்படுவது மிகவும் இன்றியமையாதது. ஓரிரு வழக்குகளில் நடுவர்கள் அளித்த தீர்ப்புகள் முன்னிகழ்ச்சி யாகவும், மேற்கோளாகவும் சுட்டப்படலாமே யல்லாமல் அவையே சட்டத் தன்மை பெற்றவையாகிவிட மாட்டா. அரசு சட்டமாக்கத் தயங்குவது ஏனென்று தெரியவில்லை.

"2000-2001 ஆண்டுமுதல், முதல்வகுப்பில் தாய்மொழி அல்லது தமிழே பயிற்றுமொழியாக இருக்கவேண்டும். படிப்படியாக மேல் வகுப்புகட்கும் பயிற்றுமொழி மாற்றம் செய்யப்பட வேண்டும்' என்றால் மூன்றாண்டுக் காலத்தில் மூன்றாம் வகுப்பு வரையில்

படிப்பகம்

www.padippakam.com



தானே செயற்படுத்த முடியும்? ஆனால் "மூன்றாண்டுக் காலத்திற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்புகளில் தாய்மொழி அல்லது தமிழ் பயிற்றுமொழியாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று அரசாணையில் கூறப்பட்டிருப்பது முரணாக உள்ளது; அரசின் நோக்கம் குறித்து வேறுவகையான ஐயங்கள் எழ வாய்ப்பு அளிப்பதாகவும் உள்ளது.

"ஆறாம் வகுப்பில் மாணவர்கள் சேர்க்கை குறித்து இப்போதுள்ள நடைமுறையே தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். ஏற்பு (அங்கீகாரம்) அளிக்கப்படாத பள்ளிகளில் படித்தவர்களுக்கும் தனியே பயின்றவர்களுக்கும் தொடர்புடைய (சம்பந்தப்பட்ட) பள்ளிகள் அளவிலேயே நுழைவுத் தேர்வு நடத்தித் திறமை தகுதி கண்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும்" என்று அரசாணையில் கூறப்பட்டிருப்பது நமக்கு வியப்பும் திகைப்பும் அளிப்பதாக உள்ளது.

ஒருமாணவன் ஐந்தாம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் தமிழ்வழியில் அல்லது அவனது தாய்மொழியில் பயின்றானா இல்லையா என்பதைவிட, ஆறாம் வகுப்பில் பிற மொழி வாயிற் கல்விக்கும் வாய்ப்பு இருப்பதால் அவ் வகுப்பிற் சேர்த்துக் கொள்ளத் தகுதியுடையவனா என்பதை முதன்மையாகக் கொண்டே நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படும். அத் தேர்வுகளையும் அப் பள்ளி அளவிலே நடத்திக்கொள்ளலாம் என்றால், தமிழ்வழிக் கல்விக்கு மாறாகச் செயற்படும் பள்ளிக்காரர்களுக்கு இதைவிட வேறென்ன நல்வாய்ப்பு இருக்கமுடியும்?

ஐந்தாம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களையும் ஒரு மாணவன் தமிழ் அல்லது தாய்மொழிவழிப் பயின்றிருக்கிறான் என்பதற்கு, மாவட்ட அளவிலேனும் அரசு பொதுத் தேர்வு நடத்திச் சான்றளிக்கும் நிலை இல்லாமல் அவ்வப் பள்ளிகளே தம்மளவில் நடத்திக்கொள்ளலாம் என்றால் இக் கல்வித் தொடர்பான முயற்சிகள் அனைத்தையும் சீர்குலைக்கவும் செயலிழக்கச் செய்யவும் இது ஒன்றே போதுமானது.

மேலும் தமிழ்நாட்டில் தமிழ் பயிலாமலே ஒருவர் தொடக்கம் முதல் உயர்கல்வித் துறைகள் வரை பயிலலாம் என்னும் நிலை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கலைஞர் தலைமையிலான தி.மு.கழக அரசு தமிழுணர்வுடைய அரசு என்னும் நம்பிக்கை இன்னும் முழுமையாகப் பட்டுப் போய் விடவில்லை. ஆயினும் மேற்கண்டவற்றையெல்லாம் நோக்கும் போது அரசு தமிழ்வழிக் கல்வித் தொடர்பான முயற்சிகளை நீர்த்துப் போகச் செய்வதிலேயே குறியாக இருக்கிறதோ என்னும் ஐயம் தமிழுணர்வாளர்களிடையே வலுப்பெறுவது உறுதி!

— இறை

படிப்பகம்

www.padippakam.com

# அலைகடலே யாரால் துன்புற்றாய் ?

— புலவர் தி.நா. அறிவுஒளி—

செக்கர்வானம் கருவானமாக மாறியது. கதிரவன் மறைந்து காரிருள் பரவத் தொடங்குமுன், அறியாமை மாய அறிவொளி சுடர்வது போலப் பால்நிலவு தண்ணொளி கொட்டிப் பொன் வட்டமெனக் கடல்மேல் தோன்றியது. அலைக் கைகள் கோடிக் கோடி நீட்டி, ஆட்டி வரவேற்றாள் நெய்தலரசி.

நீள்இலைத் தாழையும் தாழ்குலைத் தெங்கும் வீழ்கடல் அலைகளின் வெண்பனி முத்துகளால் கழுவப்பெறும் கானல் வளமிக்க கடற்கரையில் காட்சிக்கு எளிமையான் காமர் காரிகை யொருத்தி மெல்லென நடந்து வந்தாள்.

பூவனைய மென்மையுடைய தண்கடற்கரை மணல் தடவி இளந்தளிர்க் காற்று தவழ்ந்தது. கடலின் பேரோசை விண்ணை முட்டி எதிரொலிப்பது போலத் தோன்றியது!

வானில் முல்லைப் பூக்கள் மலர்ந்ததென விண்மீன்கள் அலர்ந்தன. உலகில் உள்ள காதலர் யாவரும் களிவெறி மிகும் அகத்தினராக மகிழ் சிறக்க விளங்கினர்.

ஆர்கலியை விழித்துப் பார்த்த அவ்வெழிலார் ஆரணங்காளின் கண்களில் முத்தருவியெனக் கண்ணீர் அருவி வீழ்ந்து அவள் கனிக் கன்னம், சிலைக் கழுத்து, எழில் மார்பகத்தை நனைத்தது. நெட்டுயிர்ப்பு மார்பைப் பிளந்து வெளிப்படுவதுபோல வெளிப் பட்டது.

உள்ளத்தில் உருவின்றி ஓயாமல் தோன்றும் எண்ணங்களைப் போல ஒன்றன்பின் ஒன்றாய்க் கடலலைகள் முட்டி மோதிப் பேரொலி கலித்துப் பொங்கிப் பெருகின.

அழகோவியப் பெண்ணின் கண்கள் அலைகளின் திருவிளையாடலை நோக்கின. நடுக்கடலிலிருந்து பொங்கி எழுந்து கரையை நோக்கி வரும் வெண்ணுரை பொரும் ஆண் — பெண் அலைகளை அளந்து அளந்து அடங்கின அவள் அழகுக் கண்கள்.

பகலெல்லாம் ஓயர்து குதறுகிறது கடல். உலகம் இரவில் உறங்கி ஓய்வுகொள்வது போலக் கடல் ஓய்வுகொண்டு, ஓசையின்றி இருக்கிறதா? இல்லை. 'ஓ'வெனும் அலையோசை நள்ளிரவிலும் நண்பகலிலும்—எப்போதும் — ஓயாது ஒழியாது எழுப்புகிறது. ஏன்?

படிப்பகம்

www.padippakam.com



கடல் சிரிக்கிறதா? அழுகிறதா?

சிரிப்பா?.....

"இருக்காது. இருக்கவே முடியாது!"

"சிரிப்பு நிலைக்க முடியாது"

"அழுகையா?"

"ஆம்"

"கடல் ஏன் அழவேண்டும்? கடலுக்கு என்ன துன்பம் நேர்ந்தது?"

அவ்விளங் குமரியின் எண்ணத்தில் நினைவு அலைகள் — கற்பனை விளக்கங்கள் — தோன்றின; சிதைந்தன.

செவ்விதழ்கள் பிரிந்தன. காற்றின் குறும்பால் அவள் ஆடைகளும் கூந்தலும் அலைகளை எள்ளி நகையாடுவன போல அலைந்து கூத்தாடின.

"கடலே், நீ ஏன் அழுகிறாய்? அல்லும் பகலும் உன் அழுகை கேட்பதேன்? நான் ஒரு பெண்; என் போல் நீயும் நெய்தற் பெண்ணல்லளோ? என்னிடம் உன் துயரைச் சொல். ஒருவருக்கு ஒருவர் துயரத்தைச் சொல்லிக் கொண்டு ஓரளவு ஆறுதல் அடையலாம் அன்றோ?"

"பருவ இயற்கை என்னை முற்றுகையிடக் குமரிப் பெண்ணாகப் பூத்துக் குலுங்கும் மணப் பூங்காவாகவும், காய்த்துக் கனியும் பழமுதிர் சோலையாகவும் விளங்கிய காலத்தே என் ஆருயிர்க் கணவரை — காதலரைக் கண்டேன். உன்மடியில் எங்கள் கண்கள் கண்களோடு கலந்தன. கருத்துகள் கருத்துகளோடு தழுவின. செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்ததும் நீ யறிந்ததே! காதல் வாழ்வு களவொழுக்கத்திலே அரும்பி, மலராகி, மலர் பிஞ்சாகிப், பிஞ்சு காயாகிக், காய் திருமணக் கனியாகக் கனிந்தது.

இன்பத்தைக் கண்டால் ஏன்தான் இவ்வுலக இயற்கை அழுக்காறு கொள்கிறதோ அறிகிலேன். காதலின்பம் ஆறும் முன்னே காதலர் என்னைப் பிரிந்தார். உன் அலைத்திருமேனி மீதுதானே அவரை அப்புறப்படுத்திப் பிறமொழி வழங்கும் நாட்டுக்குச் செலுத்தினாய்! நீ கொடியவள்! இன்ப இல்லற வாழ்வினர் இன்பத்தில் குறுக்கிட்டு என் அன்பரைப் பிரித்தாய்! கொடுமை பல செய்துசெய்து என் போலும் எழிலிளம் பெண்டிரின் ஆற்றாமை ஆறாத் துயரால் உண்டான வெம்மையால்தான் நீயும் அல்லற்பட்டு

படிப்பகம்

www.padippakam.com



ஆற்றாது அல்லும் பகலும் நீளும் நின் 'ஓ'வென்னும் ஓலக் குரலால் அழுகின்றனை போலும்!

கடலே, என் தலைவர் என்னைப் பிரிந்தார்; நான் என்னைப் பிரிந்தேன்; அவர் பின்னே சென்றுவிட்டேன். என்னுணர்வு சென்றபின் என்னை ஒருபொருள் என்று எவ்வாறு மொழிவது? யான் யாவையும் மறந்தேன்? நள்ளென் கங்குலும், நண்பகலும் அலமுற்று அழுகின்றேன். இரவுக்கு நானே ஒரு துணையானேன். ஆ! கடலே, நீயும் உன் தலைவனைப் பிரிந்தனையோ? ஐயோ! அளிதுமன்! அளிதுமன்! உன் காதலன் பிரிவு பொறாமல்தான் இரவும் பகலும் துன்புற்றுத் துடித்தழுது அலறுகின்றனகொல்? யார் அந்தக் காதலர்? யார் உனக்குத் துன்பஞ் செய்தவர்? யார் அணங்கு உற்றனை கடலே? என்னிடம் சொல், துன்பமுற்றவரால் துன்பத்தை உணர முடியும்...."

என்றெல்லாம் எண்ணி எண்ணிப் புலம்பிப் பேசினாள் அப் பேதை. கடலோ, அலறிக் கொண்டே இருந்ததே தவிர வேறொரு விடையும் விளம்பவில்லை.

காதலனைப் பிரிந்த அவ்விளம்பெண்ணின் ஓவியம் கற்பனை யுலகில் அழியாத வாழ்வு பெறலாயிற்று. அம்மூவனார் என்னுஞ் செந்தமிழ்ச் சான்றோர் அவ் வாழ்க்கை ஓவியத்தைப் பாட்டோவியமாகப் புனைந்தார்.

"கடலே, நீ யாரால் துன்புற்றாய்?" என்னும் வினாவை விழி நீர் வாரக் கேட்டு நிற்கும் திருவெழிற் காதலியின் ஓவியம் மறக்க முடியாத உணர்வு மாட்சியது. அவ்வினாவைப் புலவர் மொழியில் சுவைப்போம்:

*"யார் அணங்கு உற்றனை கடலே பூழியர்*
*சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன*
*மீனார் குருகின் கானலம் பெருந்துறை*
*வெள்வீத் தாழை திரையலை*
*நள்ளென் கங்குலுங் கேட்குநின் குரலே"*

*(குறுந்தொகை : 163ஆம் பாட்டு. தலைவி கூற்று.)*

"கடலே, பூழி நாட்டினரின் சிறிய தலையை உடைய வெள்ளாட்டுக் கூட்டம் பரவியிருப்பது போல் அத்துணை மிகுதியான மீன் விருந்துண்ணும் கொக்குகள் மிக நிறைந்த சோலை சூழ்ந்த பெரிய துறையில் வெண்மையான பூவையுடைய தாழையை நீர்த்திரை அலைக்கும் நள்ளிரவிலும் நின் அவலக் குரல் கேட்கின்றது. நீ யாரால் துன்பமுற்றாய்?"

*

படிப்பகம்

www.padippakam.com

## எதற்காக...?

(குமுகத்தில் நடக்கிற ஒவ்வொரு நிகழ்வையும் — ஏன் இப்படி நடக்கிறது, எதற்காக? என்று கேள்வி கேட்பதில் நம்மிடையே அக்கறை இல்லை.

அப்படியான அக்கறையூட்டத்திற்காக — இக் குமுகத்தின் மீதான ஆளுமை குறித்து விளக்கப்படுத்துபவான செய்திகளே இவை.)

# உலக வணிகக் கழகம் வரவேற்கத் தக்கதா?

வணிகத்திற்காக அன்றைக்குக் கோழிக்கோட்டில் காலூன்றியவர்கள் இந்திய அரசை உருவாக்கி ஆளத் தொடங்கியது இந்தியாவில் உள்ள மக்களின் நலனுக்கானதுதான் என்றால் அது எப்படி ஏமாளித்தனமோ —

அப்படியான ஏமாளித்தனம்தான் இன்றைக்கு உலக வணிகக் கழகத்தை நோக்கி அமெரிக்கா சென்றதும், அக்கழகத்தின்வழி அமெரிக்காவின் கட்டாயத்திற்கு அடிபணிய எண்ணுவதும் ஆகும்.

பருத்தித் துணிகளைத்தாம் அணிவோம்; வெளிநாட்டார் துணிகள் தேவையில்லை —

உப்பை நாங்களே எங்களுக்குக் காய்ச்சிக் கொள்வோம் — என்றவர்கள்தாம் இன்றைக்கு அமெரிக்காவின் வணிகக் கழகத்துக்கு ஆலாய்ப் பறக்கிறார்கள்.

இருபது பணக்கார நாடுகளின் கொள்ளைக்கே நூற்றுப் பதினைந்து — ஏழை நாட்டினரும் அடிமைப்படுகிற நிலையிலேயே அமெரிக்காவில் உலக வணிகக் கழக மாநாடு கடந்த திசம்பர் முதல் நாள் தொடங்கி நான்கு நாள்கள் நடந்தது.

கோடிக் கணக்கான பணத்தை வாரி இறைத்து நடத்தப்பெற்ற அம்மாநாட்டின் கொள்ளை நோக்கத்தைக் கண்டித்து உலகம் முழுமையும் இருக்கிற மக்கள் நாயக அமைப்புகளைச் சார்ந்த ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டம் நடத்தினர்.

அவர்களை யெல்லாம் அடித்துப் புரட்டியும், சிறைப்பிடித்தும் ஒடுக்கியது அமெரிக்கக் காவல்துறை.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதே எங்கள் மாநாட்டின் நோக்கம் என்று குப்பைப் பண்பாட்டையும், குப்பை நாகரிகத்தையும் பரப்பி உலக ஏழை மக்களின் சிந்தனைகளை நசுக்கிற அமெரிக்கா சொல்லுகிறது.

தமிழக வணிகத்தையும், தமிழகச் சுற்றுச் சூழலையும், தமிழகத் தொழில் நிலையையும் வளப்படுத்த இந்த அமெரிக்காவுக்கோ, இந்தியாவுக்கோ கவலை எதற்கு?

மாநிலத் தன்னாட்சி எழுதிய மாறர்களுக்கு மண்டையுள் இனிமேல் உறைக்கவா போகிறது.....?

— வினைஞன்

படிப்பகம்

www.padippakam.com

# நம்மை அடுத்துள்ள விண்மீன் மண்டலங்கள்!

— தமிழம் பன்னீர் —

இந்த உலகில் நாம் காணும் எல்லாப் பொருள்களுமே வியப்பைத் தருகின்றன. ஏன்? இந்த உலகமே வியப்பானதுதான். எத்தனை எத்தனை வகை உயிர் அமைப்புகள்! அவற்றின் இயக்க முறைகள்! பொருள்களின் அமைப்பு வகைகள்! எல்லாமே வியப்பு தான்!

உயிர்ப்பொருளாகிய உடல், அதன் உறுப்புகள் இயங்கும் முறை, அவற்றிற்கு உதவும் துணை உறுப்புகள், தசை நார்கள், நரம்புகள், குருதி இவை எல்லாமே வியப்புதான். இந்த உறுப்புகள், துணை உறுப்புகள் எல்லாமே உயிர் அணுக்களால் (Cells) ஆனவை. அவை ஒவ்வொன்றும் உயிருள்ளவை. நம் உடலில் அவை கோடிக் கணக்கில் இயங்குகின்றன. அவற்றின் தொகுப்புதான் நாம்.

இதைப் போலவே இந்த உலக அமைப்பும், இது இயங்கும் முறையும் நம்மை வியக்கச் செய்கின்றன. நாம் வாழும் இந்த உலகத்தைப் போலவே கோடிக் கணக்கான உலகங்கள் வான் வெளியில் (Space) மிதக்கின்றன.

நம் உடல் உயிரணுத் தொகுதிகளால் ஆனதுபோல் புடவியும் (Universe) பல விண்மீன் மண்டலங்கள்(Galaxies) விண்மீன்கள் (Stars) கோள் கள்(Planets) ஆகியவற்றின் தொகுதிகளால் அமைந்துள்ளது. நாம் வாழும் உலகத்தைப் விண்மீன் மண்டல அளவில் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அது ஒரு கடுகின் அளவாகும். அதேபோன்று புடவி அளவில் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அது ஓர் அணுவின் அளவுக்குக் கூடத் தேராது.

இந்த உலகமும் இதைச் சார்ந்த பல விண்மீன்களும் கோள்களும் வான்வெளியில் ஏதோ ஒரு பகுதியில் கதிரவனை நடுவாகக் கொண்டு சுற்றி வருகின்றன. கதிரவன் ஒரு விண்மீன்; நிலவும் நம் உலகமும் கோள்கள். இவை எல்லாம் கதிரவக் குடும்பத்தைச் (Solar Family) சேர்ந்தவை. கதிரவ குடும்பமும் இன்னும் இவற்றைப் போன்ற பலவும் பால்வீதி மண்டலத்துள் (Milky Way) இயங்குகின்றன.

பால்வீதி மண்டலத்தைப் போல் பல்லாயிரங்கோடி விண்மீன் மண்டலங்கள் புடவியில் உள்ளன. அவற்றில் ஒரு சிலவற்றையே மாந்தன் அறிந்துள்ளான். மாந்தனின் அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்பவும், அவன் வடிவமைத்துக் கொண்ட வானியல் கருவிகளின் திறமைக்கு ஏற்பவும், அவற்றைக் கண்டுபிடித்து ஆராய்ந்து வருகின்றான்.

படிப்பகம்

www.padippakam.com



நமக்கும் நம் உலகத்திற்கும் புறத்தில் இயங்கிக் கொண்டுள்ள விண்மீன் மண்டலங்களின் அளவு, ஆற்றல் ஆகியவை பற்றிய சிறிய குறிப்புதான் இனிவருவது.

இந்தப் புடவியில் (Universe) பருப்பொருள் தீவுகளாகக் (Islands of Matter) காணப்படுபவை எல்லாம் விண்மீன் மண்டலங்களே (Galaxies). அவை வான்வெளியில் (Space) மிகப் பெரிய கட்டமைப்புகளாக விளங்குகின்றன. புடவி முழுமையும் விண்மீன் மண்டலக் கூட்டங்களே நிறைந்துள்ளன. விண்மீன் மண்டலங்கள் (நீள் வட்ட வடிவத்திலும் சுருள்வட்ட அமைப்பிலும்) இரண்டு வகைகளாக அமைந்துள்ளன.

அவை நம் விண்மீன் மண்டலத்திற்குள்ளேயே மிகுந்த தொலைவில் உள்ளன. அவற்றுள் எல்லா விண்மீன்களும், பலவகைப்பட்ட விண்மீன் கூட்டத் தொகுதிகளும் முகில்போன்று தோன்றும் பொருள்களும் அடங்கும். அவற்றை நாம் ஒளிக் கருவியைக் கொண்டு பார்க்கலாம்.

எம்(M) – 31 என்னும் 'ஆன்டிரோ மெடா' (Andro Meda) விண்மீன் மண்டலம்தான் நம் நிலவுலகில் இருந்து 22.2 இலக்கம் ஒளியாண்டுத் (Light Years) தொலைவில் உள்ளது. ஓர் ஒளியாண்டு என்பது ஒரு வானூர்தி ஒரு நொடிக்கு 1,87,500 கற்கள் அல்லது 300000 அயிர மாத்திரி வேகத்தில் ஓர் ஆண்டில் செல்லும் தொலைவைக் குறிக்கும். அது மேலே சொல்லப் பெற்ற எல்லாவற்றையும்விட மிகப் பெரியது. வானியலாளர்கள் அதை அடிக்கடி ஒளிப்படம் எடுத்துள்ளனர். இரவு நேர வானில் நம் விண்மீன் மண்டலத்திற்கு அப்பால் வெறும் கண்களால் நாம் அதைக் காணலாம். எம்(M) – 31 வானியல் வரலாற்றில் ஒரு சிறப்பு இடம்பெறுகிறது. ஏனெனில் அதைத்தான் நம் விண்மீன் மண்டலத்திற்கு வெளியே உள்ள ஒரு தனி விண்மீன்மண்டலமாக உள்ளதை முதன்முதலாக வானியலாளர்கள் கண்டனர்.

'ஆன்டிரோமெடா'தான் நம் வட்டார எல்லைக்குள்ளேயே உள்ள சுருள்வட்ட அமைப்பு விண்மீன் மண்டலக் கூட்டங்களில் நமக்கு மிக நெருங்கியதும் மிகப் பெரியதும் ஆகும். உள்வட்டாரக் கூட்டம் (Local Group) எனப் பெறும் ஏறத்தாழ முப்பத்தாறு பால் மண்டலத் தொகுப்புகளுள் நம் பால் மண்டலமும் எம்(M) – 31ம்தாம் மிகப் பெரியவை. வெளியே இருந்து பார்க்கும்பொழுது நம் விண்மீன் மண்டலம் எம்(M) – 31ஐ ஒத்தாற்போல் தோன்றும்.

'ஆன்டிரோமெடா' விண்மீன் மண்டலமும் பால்வீதி மண்டலமும் (Milky Way) இரட்டையாகக் கருதப் பெறுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



அவை ஒவ்வொன்றும் ஒரு விண்மீன் மண்டலத் தொகுப்பைச் சேர்ந்தவை. அவை கட்டுப்பாடின்றி ஒன்றாகவே புடவியில் செல்வதாகத் தெரிகிறது. ஒருவேளை, 'கோமா–கன்னியோரை'(இராசி) (Coma–Virgo) என்னும் மிகப் பெரிய விண்மீன் மண்டலத் தொகுப்பைச் சேர்ந்தவையாக அவை இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

மிகச் சிறியதும் பெரியதுமான 'மகல்லானிக்கு' முகில்கள் (Magallanic Clouds) என்புவை மட்டும்தாம் பால்வீதி மண்டலத்துக்கு அருகில் இருக்கும் நம் பார்வையில் படும் விண்மீன் மண்டலங்கள் ஆகும். அவை ஒழுங்கற்ற மண்டலங்களாகப் பால் வீதி மண்டலத்திற்குத் துணைக் கோள்களாக (Satellites) உள்ளன. இவற்றோடுகூட பால்வீதி மண்டலத்திற்கு மிக அருகில் உள்ளது என்று இன்றுவரையில் எண்ணப்பட்ட — குட்டையான கீற்றுப் போல் தோற்றமளிக்கும் — மான்தலை விண்மீன் கூட்டத்தில் (Orion) செந்நிறப் பீட்டல்கூசு (Betel–Geuse) என்னும் விண்மீன் உள்ள திசையில் வானொலி அலை மூலமே கண்டுபிடிக்கப் பெற்ற — விண்மீன் மண்டலம் அண்மையில் தன் தனித் தன்மைத் தகுதியை இழந்துவிட்டது.

1994இல் இளவேனில் பருவத்தின்போது பால்வீதி மண்டலத்து நடுப் பகுதியின் மேற்புறத்தில் கூர்ந்து நோக்கியபோது ஒழுங்கற்ற அமைப்பில் குட்டையான (Dwarf) மற்றொரு விண்மீன்மண்டலம் கண்டுபிடிக்கப் பெற்றது. அப்படிப்பட்ட நிலையில் அதுதான் நம் விண்மீன் மண்டலத்திற்கு அருகில் உள்ளது ஆகும். மற்ற விண்மீன் மண்டலங்கள் எல்லாம் புள்ளித் தீவுக் கூட்டங்களாகப் பல ஒளியாண்டுத் தொலைவுக்கு அப்பால் இப்புடவி முழுமையிலும் நிறைந்துள்ளவை ஆகும்.

மிகச் சிறிய விண்மீன் மண்டலங்கள் எல்லாவற்றிலும் ஏறத்தாழ பத்து இலக்கம் விண்மீன்கள் உள்ளன. பெரிய விண்மீன் மண்டலங்களில் ஓரிலக்கம் கோடி (Million Million) விண்மீன்களும் அதற்கு மேலும் உள்ளன. ஏறத்தாழப் பத்தாயிரங் கோடி (100000 Million) விண்மீன்கள் உள்ள நடுத்தர அளவுள்ள விண்மீன் மண்டலத்தில் நாம் வாழ்கிறோம்.

பால்வீதி மண்டலத்தில் உள்ள விண்மீன் மண்டலங்களைப் போன்றே ஏராளமான விண்மீன் மண்டலங்களை இன்னும் இப் புடவியில் கண்டுபிடிக்க வேண்டிஉள்ளது. வான்வெளி முழுமையும் சிதறிக் கிடக்கின்ற, எண்ணிக்கையில் அடங்காத கோடிக் கணக்கில்

படிப்பகம்

www.padippakam.com



உள்ள விண்மீன் மண்டலங்களில் ஒன்றாகத்தான் விண்மீன்களும் வளிமமும் (Gas) தூசும் (Dust) நிரம்பிய இந்தப் பால்வீதி மண்டலம் இருக்கிறது.

விண்மீன் மண்டலங்களின் குறுக்களவு பல ஆயிரத்தில் இருந்து ஓரிலக்கம் ஒளியாண்டுக்கும் அதற்கு மேலுமுள்ள தொலைவுக்கு நீண்டுள்ளது. நம் கதிரவக் குடும்பத்தின் (Solar Family) குறுக்களவு ஏறத்தாழ 200 ஒளியாண்டுத் தொலைவு ஆகும். தொலை நோக்காடி இன்றிப் பார்க்கும்பொழுது அவை மிகமிகச் சிறிய எண்ணிக்கையில் தான் கண்களுக்குப் புலப்படுகின்றன.

ஒரு தொலை நோக்கியை வானை நோக்கித் திருப்பி எங்கெங் கெல்லாம் பார்க்கின்றோமோ அங்கங்கெல்லாம் நம் பார்வை செல்லும் தொலைவு வரையில் விண்மீன் மண்டலங்களே தெரிகின்றன. இதை வேறுவகையாகச் சொன்னால் மிகவும் நீளமான ஒரு கற்பனை ஊசியை எடுத்து நாம் வானை நோக்கிச் செலுத்துவோமானால் அது எந்த ஒரு வானுலகின்மீதும் படாமல் அடுத்த பக்கம் செல்ல முடியாது.

*

## கொலைத் தண்டனை ஒழிப்பு மாநாடு

'மரண தண்டனை ஒழிப்பு இயக்க'ச் சார்பில், மரண தண்டனைக்கு எதிரான தமிழக எழுத்தாளர் மாநாடு, கடந்த நளி 11 அன்று (27.11.'99) சென்னை — தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில், அறிஞர் எசு.வி. இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

முனைவர் தமிழண்ணல், முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம், கோவை ஞானி, பேரா. இன்குலாபு, பாவலர் மு. மேத்தா, திரு. பொன்னீலன், பேரா. அ. மார்க்கசு, திரு. சுந்தரராமசாமி, பேரா. இந்திராபார்த்தசாரதி, பேரா. கி. இராசநாராயணன், திரு. இராசம் கிருட்டிணன் உள்ளிட்ட தமிழறிஞர்களும் எழுத்தாளர்களும் திரளாக மாநாட்டில் கலந்துகொண்டனர். தமிழ்மொழி இன உணர்வுகளைப் பொறுத்து முரண்பட்ட கருத்துடையவர்களுங்கூட மாந்தநேய உணர்வோடு மாநாட்டில் பங்கேற்று இராசீவ் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை குறிக்கப்பெற்றுள்ள நளினி முதலான நால்வருக்கும் அத் தண்டனையைத் தளர்த்த வேண்டும் என்றும், கொலைத் தண்டனையை முற்றிலும் ஒழிக்கவேண்டும் என்றும் ஆணித் தரமாகப் பேசியது பாராட்டத்தக்கது *

படிப்பகம்

www.padippakam.com

# முறைப் பெயர்கள்

— புலவர் கடுங்கோ—

மக்களிடையே நிலவும் உறவு நிலைகளுள் முதன்மையானது தாய் உறவேயாகும். தாய்க்கு அடுத்தது தந்தை யுறவு. பெற்றோர்க்கு அடுத்த நிலையில் முன்னிற்பது உடன் பிறந்தோர் உறவு எனலாம்.

அப்பன், தகப்பன், அத்தன் - அச்சன், ஆனுான் - ஆனி, ஐயன், தாதை, நாயன் என்பன தந்தையைக் குறிக்கும் வேறு பெயர்கள். அவ்வாறே அம்மை - அவ்வை, அன்னை - அஞ்ஞை, அத்தி, ஆத்தி, ஆத்தை - ஆத்தாள், அச்சி, ஆச்சி, ஐயை, ஆய், தள்ளை என்னும் பெயர்கள் தாயைக் குறிப்பன.

மகவைக் குறிக்கும் பெயர்களாக மக, பிள்ளை, சேய், மதலை, குழவி - குழந்தை என்பன வழங்கி வருகின்றன. மகப் பெயர்களுள் கான்முளை என்பது ஒருமையாகவும் மக்கள் என்பது பன்மையாகவும் வழங்குவன. மகனும் மகளும் புதல்வனும் புதல்வியுமாக அப்பெயர் பெறுவர்.

உடன்பிறந்தாருள் அண்ணனை ஐயன் - தமையன், ஆயான், அண்ணாட்சி - அண்ணாத்தை, அண்ணாள்வி, தம்முன், மூத்தோன், முன்னோன் என்று கூறுகிறோம். தம்பியைத் தம்பின் – தம்பி, இளவல், இளையான், பின்னோன் என்றும் சொல்கிறோம். அவ்வாறே அக்கை அக்கைச்சி, தமக்கை, தவ்வை, மூத்தோள், முன்னை, அத்தி - அச்சி என்றும் தங்கை தங்கைச்சி, செள்ளை, இளையாள், பின்னை, பின்னி என்றும் கூறப்பெறுகின்றனர்.

உடன்பிறந்தான் — உடப்பிறந்தான் என்பன அண்ணன் தம்பியரின் பொதுப் பெயராகவும், உடன்பிறந்தாள் - உடப்பிறந்தாள் என்பன அக்கை தங்கையரின் பொதுப் பெயராகவும் உடன்பிறப்பு என்பது இருபாற் பொதுப் பெயராகவும் வழங்கப்பெற்று வருகின்றன.

அம்மையோடு, உடன்பிறந்தவன் அம்மான். அம்மானும் அவன் மனைவியும் மாமனும் மாமியும் ஆயினர். மாமன் மக்களை மணந்துகொள்ளும் முறைபற்றிப் பெண்கொடுப்பவனும் மகனுக்குப் பெண் எடுப்பவனும் மாமன் எனப்பட்டனர். எனவே அம்மானைத் தாய்மாமன் என்றலும் வழக்காயிற்று. அக்கை மகளை மணக்கும் முறைபற்றி அக்கை கணவனையும் மாமன் என்பர்.

படிப்பகம்

www.padippakam.com



அத்தனோடு (தந்தையோடு) உடன்பிறந்தவள் அத்தை. அத்தையின் மகன் அத்தான்; அத்தையின் மகள் அத்தாச்சி.

மகளின் கணவன் மருமகனும் மகனின் மனைவி மருமகளும் ஆவர். பெண்பாலார்க்குத் தம் மக்கள் மணந்துகொள்ளும் முறை பற்றித் தம் உடன்பிறந்தான்மார் மக்களும், ஆண்பாலார்க்குத் தம் உடன்பிறந்தாள்மார் மக்களும் மருமக்களாவர்.

மருமகனை மருமான், மருகன் என்றும் மணவாளப் பிள்ளை என்றும் கூறுவர். மணவாளப் பிள்ளையே மாப்பிள்ளை ஆயினார். அவ்வாறே மருமகளை மருமாள், மருகி என்றும் மணாட்டுப் பெண் என்றும் கூறுவர். மணாட்டுப் பெண்ணே இடைகுறைந்து மாட்டுப் பெண் என்றும் தலைகவிழ்ந்து நாட்டுப்பெண் என்றும் பெயர் பெற்றாள். பிறந்தவீட்டிலிருந்து புகுந்த வீட்டுக்கு இடம்பெயர்ந்து வந்தமையால் மாற்றுப்பெண் என்றும், நாற்றங்காலிலிருந்து பறித்து வயலில் நடும் நாற்றுப் போன்றவளாதலால் அவள் நாற்றுப் பெண் என்றும் மாற்றுப்பெண் நாற்றுப்பெண் என்பனவே மாட்டுப் பெண் நாட்டுப்பெண் என்றாகிவிட்டன என்றும் சிலர் கூறுப.

இனிக் கணவன் - அகமுடையான், கண்ணாளன், கொழுநன், கொண்கன், கொண்டான், நாயகன், மணவாளன், மணாளன், வீட்டுக் காரன் என்றும் மனைவி - இல்லாள், நாயகி, பெண்டு, பெண்டாட்டி, கண்ணாட்டி, மணவாட்டி, வீட்டுக்காரி என்றும் பெயர் பெறுவர்.

கணவனின் உடன்பிறந்தானைக் கொழுந்தன் என்றும், உடன் பிறந்தாளை நாத்தூண், நாத்தூணாள் (நாத்தி) என்றும், மனைவியின் உடன்பிறந்தானை அளியன் என்றும், உடன்பிறந்தாளைக் கொழுந்தியாள் என்றும் கூறுதல் வழக்கம். கணவனின் அண்ணனை மூத்தார் என்றும் கணவனின் அக்கையை நங்கையார் என்றும் கூறலுமாம். மனைவியின் அக்கையும் நங்கையாவார்.

அண்ணனின் மனைவியான அண்ணிக்கு ஐயன்தேவி ஆயந்தி நங்கை, அண்ணன் பெண்டு என்றெல்லாம் பெயர்.

ஒருவனுக்குப் பன்மனைவியர் இருந்தால் அவர்கள் ஒக்களத்தியர் எனப்பெறுவர். சகக்களத்தி (சக்களத்தி) என்பது சமற்கிருதங் கலந்த இருபிறப்பிச் சொல்.

கணவனின் உடன்பிறந்தான் மனைவி ஓர்ப்படி, ஓர்ப்படியாள், ஓர்ப்படைச்சி, ஓரகத்தாள் எனவும் மனைவியின் உடன்பிறந்தாள் கணவன் ஓரகத்தான் (ஒருகுடி மணாளன், ஒருகுடியிற் கொண்டோன்) எனவும் கூறப்பெறுவர். சகலன் என்பது சமற்கிருதம்.

படிப்பகம்

www.padippakam.com



அம்மான் மகனை அம்மான் சேய் (அம்மாஞ்சி) என்பதும் அத்தையின் மகனை அத்தையின் பேறு (அத்திம்பேர்) என்பதும் மனைவியைக் குறிக்கும். அகமுடையாள்(ஆம்படையாள்) என்பதும் தூய தமிழ்ப்பெயர்களேயாயினும் தமிழ்நாட்டில் ஒரு சாராரிடம் மட்டும் வழக்கில் உள்ளன. அவ்வாறே அத்தன் (அத்தா) என்பது வேறொரு சாராரிடையே வழக்கில் உள்ளது.

சேர்க்கையைக் குறிக்கும் மித் என்னும் சமற்கிருதச் சொல்லின் நீளமே மைத்துனன் மைத்துனி. இவை நிரலே மச்சினன் மச்சான் எனவும் மதனி, மச்சினி, மச்சாள், மச்சி எனவும் திரிந்து வழங்கி வருகின்றன.

மைத்துனனைக் குறிக்கும் தமிழ்ச் சொல் அளியன் என்பது. இது பழந்தமிழ்ச் சேர நாடாகிய மலையாள நாட்டில் பெரு வழக்காக உள்ளது.

சமற்கிருதமான 'சம்பந்தி'யைக் குறிக்குந் தமிழ்ச் சொல்லாக 'உறவாடி' என்பதைக் கொள்ளலாம் என்கிறார் மொழிஞாயிறு பாவாணர்.

பெரியப்பா, பெரிய அத்தான் எனவும் சின்னம்மா, சின்ன அண்ணன் எனவும், நடுமாமா, நடுதம்பி எனவும் கூறுமாறு போல மூத்தோரைக் குறிக்கப் பெரிய எனவும் இளையோரைக் குறிக்கச் சிறிய - சின்ன எனவும் இடைப்பட்டவரைக் குறிக்க நடு எனவும் அடைமொழிகள் சேர்கின்றன.

மேலுங் கிளைகள் விரிவடையும்போது ஒன்றுவிட்ட தம்பி, ஒன்றுவிட்ட கொழுந்தி எனவும் இரண்டாங்காலில் அத்தை மூன்றாங்காலில் மாமனார் என்றும் கூறுமாறு போலக் கால்வழி குறித்து அயன்மை தோன்றச் சுட்டலும் காணலாம்.

மம்மிMummy) டாடி(Daddy)யை அடுத்து அங்கிள்(Uncle) ஆண்டி(Aunty) கசின்(Cousin) என்னும் ஆங்கிலச் சொற்கள் தமிழ் மக்கள் பெரும்பாலரைப் பற்றிக்கொண்டமையால் மேற்கூறிய தமிழர்தம் உறவுமுறைப் பெயர்கள் மறைந்துகொண்டுள்ளன.

இனிப் பெற்றோரின் பெற்றோர் பாட்டன், பாட்டி என்றும், பாட்டனின் தாயுந் தந்தையும் பூட்டன், பூட்டி என்றும் பூட்டனின் பெற்றோர் ஓட்டன், ஓட்டி யென்றும் பெயர் பெறுவர்.

பாட்டனுக்குப் போற்றி - போத்தி என்றும், பூட்டன் பூட்டிக்குக் கொள்ளுப் பாட்டன், கொள்ளுப்பாட்டி என்றும், ஓட்டன் ஓட்டிக்குச் சேயான். (சீயான்), சேயாள் (சீயாள்) என்றும் பெயருண்டு.

படிப்பகம்

www.padippakam.com



இனி, மகனின் மக்களைப் பேரன் பேர்த்தி என்றும் அவர்தம் மக்களைக் கொள்ளுப் பேரன், கொள்ளுப் பேர்த்தி என்றும் கூறுவது வழக்கம்.

இவ்வாறு தமிழனுக்கு முன்னை நான்கு தலைமுறைக்கும் பின்னை மூன்று தலைமுறைக்குமாக ஏழுதலை முறைக்குத் தனித்தனி முறைப் பெயர்கள் உண்டு.

ஆங்கிலத்தில் Grandfather Grandson என்றும் Great Grand father, Great grand son என்றும் கூறுவர். அதற்கு மேலே போனால் Great great grand father என்பது போல `GREAt' என்பதை அடுக்கிக் கொள்ள வேண்டியதுதான். இது நிற்க!

இவ்வாறு தாயை யொட்டித் தொடர்ந்த குடும்பம் அமைந்து கிளைத்துச் சுற்றமாகப் பெருகி மக்களிடையே குடும்பும் குடியும் குலமும் இனமுமான பாகுபாடுகளைக் கொண்டுள்ளது.

கோத்திரம் என்பது தமிழ்மக்கட்குரிய பிரிவன்று. கோத்திரம் என்னுஞ் சொற்கு மாட்டுக் கொட்டில் — மாட்டு மந்தை என்று பொருள். ஆரிய இனத்தவரிடையே மாட்டு மந்தைக்குரிமை பற்றியே உட்பிரிவுகள் அமைந்தன. அவை சிறப்புப் பெயர்பெற்று இன்றும் அவர் வழியினரிடையே தொடர்கின்றன.

இனி, மக்களல்லாத ஏனைய உயிரினங்களிடையே உறவு நிலைகளைக் காண்பது வழக்கமில்லை. தாய் ஆவு (பசு) தாய்க் கோழி என்பன போலச் சில விலங்கு பறவைகட்குக் கூறலாமேனும் அவற்றினும் தாய் என்னும் அளவுக்கு மேல் நீள்வதில்லை.

✳

## கொலைத் தண்டனையைக் கைவிடக்கோரி-
## பாளைச் சிறையில் 108 பேர் உண்ணாமை!

இராசீவ் கொலைவழக்கில் தூக்குத் தண்டனையளிக்கப்பட்ட நளினி முதலான நால்வருக்கும் பாளைச் சிறையில் தூக்குத் தண்டனைச் சிறையாளிகளாக உள்ள நால்வருக்கும் அத் தண்டனையைத் தளர்த்தக் கோரியும், இந்திய அரசு கொலைத் தண்டனை முறையை முற்றிலும் கைவிடக் கோரியும் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் வாணாள் தண்டனைச் சிறையாளிகளான முகிலன், அறிவழகன் ஆகியோரும் மற்றும் நூற்று ஆறுபேருமான நூற்றெட்டுப் பேர் கடந்த நளி 13 அன்று (29.11.'99) சிறைச்சாலையில் ஒருநாள் உண்ணாநோன்பு மேற்கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழினத் தன் முடிவுரிமை

— சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன் —

தனித்தமிழ் இயக்கத்தின் எழுச்சிப் பேரொளியான பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் (1933-1995), தன்னுரிமைக் கொள்கைச் செயற்பாட்டாளர்; தமிழ் மண்ணுக்கும், மக்களுக்கும், மொழிக்கும் முழு உரிமைகளைப் பெற்றுத் தரும் செயல் விசை; அனைத்துப் புலங்களிலும் புரட்சி மலரக் குரல் கொடுத்த மொழி, இன மறவர். 'தென்மொழி'யால், 'தமிழ்நிலம்' காத்து, தமிழ்த் தேசிய இன விடுதலைக்காக அயராத தொண்டாற்றித் தன்னையே ஈகம் செய்து கொண்ட தமிழர் தளபதி.

தமிழையே தம் உயிர் மூச்சாகக் கொண்டியங்கிய பெருஞ்சித்திரனார் சேலத்தில் 1933ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோரிட்ட பெயர் மாணிக்கம். இடைநிலை வகுப்பு வரை சேலம் நகராட்சிக் கல்லூரியில் பயின்று, கூட்டுறவுத் துறையிலும், அடவித் துறையிலும், அஞ்சல் துறையிலும் 1961 முதல் 1967 வரை பல பணிகளில் பணியாற்றினார். 1965ஆம் ஆண்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போரில் வீரியத்துடன் கலந்துகொண்டதால் பணியிலிருந்து நீக்கப் பெற்றார். 1969 முதல் தம்மை முழுமையாகப் பொதுப் பணியில் ஈடுபடுத்திக்கொண்டார்.

தமது 13ஆம் அகவையிலேயே (1945) பாடல் புனையத் தொடங்கிய பாவலர் அவர்கள். கொய்யாக்கனி (1956), பள்ளிப் பறவைகள் (1962), பாவியக் கொத்து (1962), எண்சுவை எண்பது (1964), ஐயை (முதற்பகுதி) (1968), மகபுகுவஞ்சி (1973), வாழ்வியல் முப்பது (1977), ஐயை (இரண்டாம் பகுதி) (1978), கனிச்சாறு (மூன்று தொகுதிகள்) (1979), நூறாசிரியம் (முதற் பகுதி) (1979), நூறாசிரியம் (இரண்டாம் பகுதி) (1981), உலகியல் நூறு (1982) திருக்குறள் மெய்ப்பொருள் உரை முதலிய அரிய நூல்களைப் படைத்தளித்தார்.

1959ஆம் ஆண்டிலேயே முற்றும் தனித் தமிழுக்கென்றே 'தென்மொழி' என்னும் தூய தனித்தமிழிதழை நெல்லிக்குப்பத்தில் தொடங்கினார். சிறிது கால இடைவெளிக்குப் பிறகு 1963ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இறுதி வரை நடத்தி வந்தார். 1965 முதல் சிறுவர் இதழாகத் 'தமிழ்ச்சிட்டும்', 1982 முதல் 'தமிழ் நிலம்' என்னும் கிழமை இதழும் வெளிவந்தன.

படிப்பகம்

www.padippakam.com



பெருஞ்சித்திரனாரின் ஆயிரக்கணக்கான சொற்பொழிவுகளினாலும், அவருடைய இதழ்களின் இடையறாப் பணியினாலும், தமிழ் மக்களிடையே குறிப்பாக மாணவர்கள், ஆசிரியர்களிடையே பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. தம் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக்கொண்டனர். பேச்சிலும் எழுத்திலும் தனித்தமிழ் நடையைக் கையாண்டனர். 'தென்மொழி' ஓர் இதழாக மட்டுமல்லாமல் 'தென்மொழி இயக்கமாக'வும் சென்ற 30 ஆண்டுகளுக்கும் மேல் இயங்கி வருகிறது. தொடர்ந்த தனித் தமிழியக்க முயற்சிகளால் அரசுத் துறை, பொதுமக்கள், சில இதழ்கள் போன்றவற்றில் நல்ல தமிழ் வளர்ந்துள்ளது.

பெருஞ்சித்திரன், மெய்மைப் பித்தன், தாளாளன் என்பன இவர்தம் புனைபெயர்கள். 'பாவலரேறு' எனத் தம் புலமைத் திறம் கொண்டு இவர் அழைக்கப்பெற்றார்.

1972ஆம் ஆண்டு, 'தமிழக விடுதலை மாநாடு' தொடர்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு மதுரைச் சிறையில் ஒரு திங்கள் வாடினார். 1974ஆம் ஆண்டு சென்னையில் 'தமிழக விடுதலை மாநாடு' நடத்தியதால் சென்னை நடுவண் சிறையில் இரண்டு திங்கள் அடைக்கப்பட்டார். பின்னர் 1976ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரை தடுப்புக் காவலில்(மிசாவில்) சென்னைச் சிறையில் வாடினார். அதன் பின்னரும் அவரது தமிழின விடுதலைக் கொள்கை. செயற்பாட்டிற்காக வெஞ்சிறையில் வாட்டப்பட்டார்.

பாவாணர் நிறுவிய 'உலகத் தமிழ்க் கழகத்'தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய பாவலரேறு அவர்கள். அவரது மறைவுக்குப்பின். 1981 நவம்பர் முதல் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தைத்' தொடங்கினார். தூய தமிழ். சமனியக் குமுகாயம். அறிவியல் அணுகுமுறை முதலிய சீரிய குறிக்கோள்களுடன் இந்த அமைப்பு செயல்பட்டது.

பெருஞ்சித்திரனார் அவர்கள். பெரும்பாவலராக. நூல் வெளியீட்டாளராக. இதழாசிரியராக. தமிழ்க் கழகத் தலைவராக. தனித்தமிழ்ப் பிழம்பாக., சொற்பொழிவாளராக, அரிய சிந்தனையாளராக. எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வீராகத் திகழ்ந்தார் அவரது அயராத உழைப்பால் தமிழ்த் தேசியம் வீறுகொண்டெழுந்தது.

இருப்பு : 'இந்தியாவில் தேசிய இனங்களும்
தமிழ்த் தேசியமும்'

படிப்பகம்

www.padippakam.com



# மரணம்

? தென்மொழியின் சென்ற இதழ் ஆசிரியவுரையில் 'மரணம்' என்னுஞ் சொல் இடம் பெற்றிருக்கிறதே, அது தமிழ்ச் சொல்லா?

— தெ. பன்னீர்செல்வம், சென்னை - 19

! மரணம் என்பது வடமொழியி லும் வழங்கும் தமிழ்ச் சொல்லே. மிகுதிப் பொருளுணர்த்தும் கடி என்னுஞ் சொல் கரி எனத் திரிந்தது போலச் சாவைக் குறிக்கும் மடி என்னுஞ் சொல் மரி எனத் திரிந்துள்ளது. அது அணம் என்னும் பின்னொட்டுப் பெற்று மரணம் என்று ஆகியுள்ளது (மரி + அணம் = மரணம்) என்பது மொழிஞாயிறு பாவாணர் தரும் விளக்கம். வடமொழியில் இருக்கு வேதத்திலும் இடம் பெற்றுள்ள இச் சொல் (ம்ரு) இலத்தீனத்தில் மொரி (Mori) எனத் திரிந்து வழங்குவதாக அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

? சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசுலாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் துறை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் உறுதிமொழிந்திருப்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

— கு. கடர்க்கொடி, சென்னை - 96

! சென்னைப் பல்கலைக் கழகத்தில் தவறான தொடக்கமாகக் கிறித்தவத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் துறை ஏற்கெனவே உள்ளது. அதை யொட்டியே முதலமைச்சர் அவ்வாறு உறுதியளித்துள்ளார் போலும்!

அவ்வாறு செய்தால் இனிச் சமணத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் துறையும் புத்தமதத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் துறையும் நிறுவ நேரலாம். இப்போதைய நிலையில் 'இந்துமத'த் தமிழ் இலக்கிய, ஆராய்ச்சிக்கெனத் தனித்துறை நிறுவ வேண்டிய அல்லது முன்னிருப்பதை அறிவிக்க வேண்டிய நெருக்கடி ஏற்படாமற் போகாது.

கடந்த சில ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வரும் தாழ்த்தப்பட்டோர் (தலித்து) இலக்கியம் என்னுங் குரல் மேலும் அழுத்தமுற்று அதற்கெனத் தனித்துறை நிறுவுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இவையெல்லாம் தமிழ்ப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பிற பல்கலைக் கழகங்களுக்கும் நீளும்.

பல்கலைக் கழகங்களில் எத்தகைய ஆராய்ச்சியும் மேற்கொள்ளப் படலாம். அவற்றுக்கென இருக்கைகளுங்கூட அமைக்கலாம். ஆனால் தனித்தனித் துறைகள் வகுப்பது சரியன்று..

மதத்தில் தொடங்கிச் சாதியில் தொடரும் இவ்வகைச் செயற் பாட்டால் முன்பு மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தலைவர்கள் பெயர் சூட்டப்பட்ட நிலைபோல் பல்கலைக் கழகங்களில் தமிழ் துறைகளும் அவல நிலைக்கு இடனாகக் கூடும்.

— இறை

படிப்பகம்

www.padippakam.com

தென்மொழி

# இராமகோபாலனின் வாய்க்கொழுப்பு அடங்கட்டும்!

—தமிழரசு—

வீரத் துறவி எனச் சுற்றிவரும் இராமகோபாலனின் இந்து வெறித்தன நடவடிக்கைகள் கொஞ்சநஞ்சமல்ல.

ஆரியப் பார்ப்பனிய நச்சுணர்வுகளைத் தம் பேச்சுகளிலும் செயல்களிலும் பரப்பல் செய்து கொண்டிருக்கிற அவர் எதையும் துறந்துவிட்டவர் அல்லர். மாறாய் இந்துப் பார்ப்பனீய வெறி கொண்டவராகவே அவர் உள்ளார்.

தமிழகத்தில் மதக் கலவரங்களைத் தூண்டிவிடவும், அதன்மூலம் வெறியாட்டமாடி மக்களிடையே கொலைகள் நடைபெறுவதற்கும் காரணமானவரே இந்த இராமகோபாலன் போன்றவர்கள்தாம்.

கன்னியாகுமரி முதல் அமெரிக்க வல்லரசிய உறவு வரைக்கும் அனைத்திலும் இந்துவியப் பார்வையோடு ஆளுமை வெறியினராய் இயங்கிக் கொண்டிருக்கிற அந்த ஊளைப் பார்ப்பனர் அண்மையில் வாய்க் கொழுப்பெடுத்துப் பேசிய பேச்சு மிகவும் கண்டனத்துக் குரியது.

தூக்குத் தண்டனைக் குற்றவாளிகளுக்குப் பரிவு காட்ட வேண்டிய தேவையில்லையாம்.

அவர்களையெல்லாம் தூக்கில் போட்டு விடலாமாம். ஒருவேளை அவர்களைத் தூக்கில் போடுவதால், நளினியின் குழந்தை ஏதிலியாகுமெனில், அதைத் தாங்கள் எடுத்து வளர்க்கிறார்களாம். — என்னே அவரின் உணர்வு, பார்த்தீர்களா?

மதக் கலவரங்களை நடத்துவது, அதன்வழி இந்துவிய வெறியுணர்வை வளர்ப்பது அவ் வெறியுணர்வைக் கொண்டு பார்ப்பனீய இந்தியக் கட்டமைப்பை இறுக்கிக் கட்டிக்கொள்வது எனும் அவர்களின் குடுமிய வெறியுணர்வுக்குத்தான் இதுபோன்ற சிந்தனைகளெல்லாம் தோன்றும்.

'இதுவரை நடந்த மதக் கலவரங்களுக்கெல்லாம் காரணம் அத்துவானி என்று குற்றம் சாட்டி அத்துவானியைத் தூக்கிலிடுங்கள்; அவர் பிள்ளைகளை வேண்டுமானால் நாங்கள் காப்பாற்றுகிறோம்' — என்றால் எப்படியோ அப்படித்தானே இது.

படிப்பகம்

www.padippakam.com



புலனாய்வு முற்றுப் பெறாத இராசீவ் கொலை வழக்கு — அதில் அரசியல் காழ்ப்புணர்ச்சியாலும், தம் பதவி வேட்கையாலும் 26 பேருக்குத் தூக்குத் தண்டனை கொடுத்த வழக்கு மன்றத் தீர்ப்பு, அதை ஆராய்ந்த மீமிசை மன்றம், —'தடா' சட்டமுறைப்படியே இதை உசாவ முடியாது என மறுத்தும், சாந்தன் என்பார் ஆள் மாறி இந்தச் சாந்தன் வேறு ஒருவர் என்பதை ஏற்றும் — நால்வருக்குமான தூக்குத் தண்டனையை நிறைவேற்றுகிற ஏய்ப்பு நடைமுறைகள் — இவைதாமே இராசீவ் கொலை வழக்கின் போக்கு.

உண்மைக்குப் புறம்பாய் — பார்ப்பனிய ஆளுமையை நிலை நிறுத்திக் கொள்ள இவர்கள் செய்த, செய்து கொண்டிருக்கிற கொலைகள்தாம் எத்தனை... எத்தனை....

இனியும் நம்மிடையே ஏமாற்றம் இருக்குமானால் இழப்புகளும் இருக்கவே செய்யும்.

இராமகோபாலன்களின் வாயடக்கப்படுவதே நம் உரிமை வாழ்வுக்கான வழியாய் அமையும்!

*

## வெற்றிச்செழியன் — நிலவழகி திருமணம்

சென்னை — குன்றத்தூர்ப் பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளித் தாளாளர் திருவளர்செல்வன் புலவர் வெற்றிச்செழியன், தூத்துக்குடி அன்னம்மாள் கல்லூரி ஆய்வு நிறைஞர் திருவளர்செல்வி நிலவழகி ஆகியோர் திருமணம் தி.பி. 2030 நளி 10 அன்று (26.11.'99), குன்றத்தூரில் திரு. தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையிலும் திருவினர் சவரிமுத்து, உரோசுமேரி, குமாரசாமி, கற்பகம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

திரு. கபரியேல் கென்னடி வரவேற்றுப் பேசினார். முனைவர் அரணமுறுவல் அறிமுகவுரை நிகழ்த்தினார். 'தமிழ் விடுதலை', 'ஒடுக்கப்பட்டோர் விடுதலை' என்னும் பொருள்கள் குறித்து நிரலே திரு. தியாகு, திரு. பொழிலன் ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்வழிப் பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. திரு. இரமேசுகுமார் நன்றி நவின்றார்.

திருமணத்திற்கு வருகைதந்தோர்க்கு மணமக்களின் சார்பில் 'நல்ல தமிழ்ப் பெயர்கள்' என்னும் நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

திருமண நினைவாகப் 'பாவலரேறு தமிழ்க்களத்திற்கு' உரு. 1000 நன்கொடையாக திரு. தாமரை பெருஞ்சித்திரனாரிடம் கொடுக்கப் பெற்றது.

படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# மதம் கொண்ட தமிழ்ப் பெயர்கள் — இசுலாம்

— குழந்தைவேலன்
(தொல்லியல் ஆய்வறிஞர்)

தமிழகத்தில் இசுலாத்தைப் பரப்பியவர்களில் பெரும்பான்மையர் அரபி இசுலாமியர்களாகவே இருத்தல் வேண்டும். ஐவேளைத் தொழுகையின்பொழுது அரபி மொழியிலேயே திருக்குர்ரான் ஓத வேண்டி இருந்தது. அரபு அறியாத தமிழர்களுக்குத் தீனின் (இசுலாம் மறை) கருத்துகளை அறியவைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அவர்கள் அறியும் வண்ணம் தமிழ் வெளியீடுகளை வெளியிட்டனர்; சொற்பொழிவுகளைச் செய்தனர். இவற்றைச் செய்தவர்கள் தீனிலும் அரபியிலும் புலமை பெற்ற அளவுக்குத் தமிழில் புலமை பெற்றவர்களல்லர். தமிழ் கற்றவர்களாக இருப்பினும் அரபுச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல் அறிய இயலாதவர்களாகவோ அரபு மொழிச் சொல்லை மாற்ற மணமில்லாதவர்களாகவோ இருந்துள்ளனர். எனவே அரபு மொழிச் சொற்களைத் தமிழ் வினைமுடிபு கொண்டு எழுதினர். அரபுச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்தால் அதன் இறைத்தன்மை கெட்டுவிடும் என்பதும், அரபு மொழியை விட்டுக் கொடுக்க மனம் வராததும் காரணமாக இருக்கலாம். இன்னும் அரபுச் சொற்களை அரபு ஒலி மாறாமல் இருக்க அரபு எழுத்துகளையும் பயன்படுத்தினர். அதனால் கிறித்தவத் தமிழ் போல அரபுத் தமிழ் என ஒரு கலவை மொழி உண்டாயிற்று. கால வளர்ச்சியாலும், இசுலாம் மதத்தைத் தழுவிய தமிழர்கள் தம்மையும் தமிழையும் உணர்ந்து தமிழ்ச் செம்மையைப் போற்றத் தொடங்கியதாலும் அது இன்று வலிவிழந்துவிட்டது என்றாலும் அதனைத் தூக்கிப் பிடிப்பார் ஒருசிலர் இல்லாமல் இல்லை.

ஏற்கனவே கூறியது போன்று பதினான்காம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தமிழ் காப்பாரில்லாத வேலியற்ற பயிராகப் போயினமையால் ஒவ்வொரு மதத்தாரும் தங்களுக்கேற்பத் தமிழை வளைத்துக் கொண்டனர். இக் காலக் கட்டத்தில் ஒவ்வொரு மதத்தவரும் தமது மதஞ் சார்ந்த மக்களை அடையாளப்படுத்திக் கொள்ளத் தம் மத, தம் நாட்டு மொழிகளில் வழங்கும் பெயர்களைச் சூட்டித் தமிழர்களைக் கூறுபடுத்தியதை வரலாறு காட்டும். இசுலாம் மதத்து மொழி அரபி ஆதலாலும், பாரசீகரும் உருதுக்களும் இம்

படிப்பகம்

www.padippakam.com



மதப் பரவலில் முதன்மை பெற்றதாலும் அரபி, பார்சி, உருதுப் பெயர்களை இசுலாமியப் பெயர்களாகச் சூட்டினர். இதனால் புதுநெறி தழுவுவாரும், நெறிவாழ் மக்களுக்குப் பிறந்தாருமாகிய தமிழர் ஒவ்வொருவரும் வேற்றுமொழி அடையாளங்களையே பெற்றனர். அதனால் தமிழ்நாட்டில் இந்துப் பெயர்களென வடமொழிப் பெயர்களும், கிறித்தவப் பெயர்களென மேலைநாட்டு மொழிப் பெயர்களும், இசுலாமியப் பெயர்களென அரபிப் பெயர்களும் தமிழ்நாட்டுத் தெருக்களில் உலவப் போந்தன. தமிழனைத் தமிழனாக அடையாளங்காணப் பெயர்களைத் தேடவேண்டி இருந்தது. மக்கட் குலத்திற்கடையாளமான இன மொழிப் பெயர்கள் அழிந்து ஒழிந்து போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் ஏற்கனவே கூறியது போல இந்து இசுலாமியனாகவும், கிறித்தவனாகவும் சமணனாகவும் புத்த மதத்தினனாகவும் வேறு எவ்வெம் மதங்களில் இயலுமோ அவ்வம் மதத்தினராகவும் விரும்பும்பொழுது மாறிக்கொள்ளலாம். ஆனால் ஒரு தமிழன் பிரெஞ்சு இனத்தவனாகவோ, அராபிய இனத்தவனாகவோ தன்னை மாற்றிக்கொள்ள இயலாது. இன்னொரு மொழிக்காரனாக மாறிக்கொள்வதும் இயலாது. எனவே மத அடையாளங்களைவிட இன, மொழி அடையாளங்களே மாறாதவை. உலக நடைமுறையிலும் இதனையே காண்கிறோம். ஒவ்வோரினமும் தன்னைத் தன் மொழிக்குள் அடையாளப் படுத்தவே விழைகின்றது. நம் இசுலாமிய உடன்பிறப்புகளும் இதற்கு விலக்கல்லர். "இசுலாம் எங்கள் நெறி; இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்பது அவர்தம் உயிர்மூச்சாகத் திகழ்கின்றது. எனவே இதற்கான அறிவுநிலை ஆய்வை மேற்கொண்டு தம் இன மொழி அடையாளத்தை ஏத்திப் பிடிக்கும் கடப்பாடு அவர்களுக்குண்டு. அதனால் அதற்கான வழிமுறைகளைக் காண்போம்.

இந்து (வைதீக) மதப் பெயரென அறிந்தும் அறியாதும் சூட்டிக் கொண்ட வடமொழிப் பெயர்களும், கிறித்தவப் பெயர்களெனச் சூட்டிக்கொண்ட ஐரோப்பிய, மேலை ஆசிய மொழிப் பெயர்களும், இசுலாமியப் பெயரென வைத்துக்கொண்ட அரபு (பாரசீகம், உருது) மொழிப் பெயர்களும் மதப் பெயர்களாகா. அப்பெயர்கள் மதமும் மத நெறியாளர்களும் தோன்றுவதற்கிடமாக அமைந்த மொழிகளின் பெயர்களேயாகும். இறைவன் எந்த ஒரு மொழியையும் தனது மொழியாகக் கூறியதாக எந்தச் சமயமும் கூறிக்கொள்ளச் சான்றுகள் இல்லை.

ஒரே நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவார் உலகெங்கணும் இருக்கலாம். அவர்கள் தழுவு நெறி ஒன்றாயினும் இனத்தாலும்

படிப்பகம்

www.padippakam.com



மொழியாலும் வெவ்வேறானவரே. இசுலாம் நெறிவழுவாது ஆட்சி செய்யும் நாடுகள் உலகில் பல உள்ளன. அவை யாவும் ஒழுகும் நெறியால் (மார்க்கத்தால்) ஒன்றேயாயினும் இனத்தாலும், மொழியாலும் தங்களுக்கெனத் தனித்தனி அடையாளங்களும் கொடியும் குடையும் கொண்டு பிரிந்தே ஆள்கின்றன என்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக ஒரே நெறியால் ஒன்றாக ஒரு குடைக்கீழ் இருந்த பாகித்தானும் வங்கதேசமும் தனித்தனியே பிரிந்து தனியாட்சி மேற்கொள்வதற்குக் காரணம் மொழியும் இனவுணர்வுமே. மொழிவழியும் இனவழியுமே மக்கள் ஒன்றுபடும் பொதுக்கூறாகத் திகழ்வது உலகியல் வரலாற்றுண்மை. எனவே மொழியையும், இனத்தையும் சிதையாமல் வளர்த்தெடுப்பது மக்கட் குலத்தின் பண்பு; இயற்கை.

இனி நாம் எடுத்துக்கொண்ட இசுலாம் மதத்திற்கான மொழி அரபி என்பது ஆண்டவனின் அருளிப்பாடன்று; அதற்கான சான்றுகளும் இல்லை. இறுதி நபியாகிய அண்ணலாருக்குத் தெரிந்த அவர்தம் தாய்மொழி வழியாக வெளிப்பட்ட பெருமை மட்டுமே அதற்குண்டு. அதனால் மட்டுமே அதனை மதமொழியாகக் கொள்வதென்றால் இறைவனால் அண்ணலார்க்கு முன் அருளப்பட்ட முந்தை நபிகளின் மொழிகளையும் தெய்வ மொழிகளாகக் கொள்ளவேண்டும்.

அண்ணலார்க்கு முன் இம் மண்ணுலகில் ஓரிலக்கத்து இருபத்து நான்காயிரம் இறைத் தூதர்கள் இறைவனால் இம் மண்ணுலகுக்கு அனுப்பப்பட்டு எல்லா இனத்திலும் எல்லா நாட்டிலும் எல்லா மொழியிலும் பிறந்துள்ளனர். "நம்முடைய தூதர் வராத எந்த இனத்தாரும் இம் மண்ணுலகில் இருக்கவில்லை" *(35 : 24)* என்பது திருமறை வாசகம். இதனால் இறைவன் எல்லா இனத்தாரையும் தன் மக்களாகவும், எல்லா மொழியையும் தன் மொழியாகவும் கருதினார் என்பது தெளிவாகிறது. எனவே உலகின் அனைத்து மொழிகளும் இறைமொழிகளே — மதமொழிகளே என்பதில் ஐயப்பாடு ஏற்பட இடமில்லை.

அவ்வாறிருக்க ஒரு மொழியை மட்டும் ஒரு மதத்திற்குரிய மொழியாகக் கருதுவது இறை விருப்பத்திற்கு முரணானதாகும். அதனால்தான் ஒவ்வோர் இன மக்களுக்கும் அவரவர் மொழியைக் கொண்டே மிகத் தெளிவாக எடுத்துக்கூறும் பொருட்டு ஒவ்வோர் இடத்திற்கும் ஒவ்வொரு தூதரை இறைவன் அனுப்பியதாக *(14 : 4)* அண்ணலார்க்கு அருளப்பட்டது.

அண்ணலார்க்கு இறைத்திருமொழி அருளப்படுமுன்னரே மூசா

படிப்பகம்

www.padippakam.com



நபிக்குச் சீனாய் மலையில் 'பயனுள்ளது (தௌரத்)' எனும் முதல் திருமறை சுர்யானி மொழியில் அருளப்பட்டது என்றும், தாவூது நபிக்கு 'அழுத்தமாக எழுதப்பட்டது (சபூர்)' என்னும் இரண்டாம் திருமறை உனானி மொழியில் அருளப்பட்டது என்றும், இரண்டாவது திருமறைக்குப் பின் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குப் பின் 'இஞ்சீல்' எனும் மூன்றாவது திருமறை சுர்யானி மொழி வழியாக ஈசா நபிக்கு அருளப்பட்டது என்றும் இறுதித் திருமறையான "புர்கான்" அண்ணல் நபிக்கு அரபிவழி அருளப்பட்டது என்றும் இசுலாமிய வரலாற்றால் அறியக் கிடக்கிறது.

அரபிமொழி தேவமொழி என்றால் சுர்யானி, உனானி மொழிகளும் தேவமொழிகளே; மத மொழிகளே. ஒரு மொழி மட்டும் தேவமொழி என்றிருப்பின் திருமறை அனைவருக்கும் ஒரே மொழியில் அருள்ப்பட்டிருக்கும். அவரவர் அறிந்த மொழியிலேயே திருமறை அருளப்பட்டமையால் இறைவன் திருமுன் அனைத்து மொழிகளும் இறை — மத மொழிகளென்பதே இறைவன் திருவிருப்பம் ஆகும்.

இசுலாமிய வரலாற்றுப்படி தமிழ்மொழியே முதன்மொழி: இறைவனால் விரும்பப்பட்ட இறைமொழி என உரிமை கொண்டாடத் தமிழர்களாகிய நமக்கும் பல ஏதுக்கள் உள்ளன. இறைவனால் படைக்கப்பட்ட முதல் மாந்தனும், மண்ணுலகுக்கு அனுப்பப்பட்ட முதல் இறைதூதனும் ஆதம் (Adam) ஆவார். ஆதம் பிறந்தது மக்கட் குலத்தின் தொட்டில் என்றழைக்கப்படும் தொல் தமிழ் நிலமாகிய இலெமூரியாக் கண்டமெனப் பெயரிய குமரிக் கண்டத்தில்தான் என்பது இசுலாமிய மரபு. இன்றும் இலங்கையில் உள்ள ஆதம்மலை ஆதமினுடைய பிறப்பிடமாகக் கருதப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் பிறந்த ஆதம் என்ன மொழி பேசியிருப்பார் என்பது சொல்லாமலே விளங்கும். "ஆதமுக்கு எல்லாப் பெயர்களையும் கற்பித்தோம் (2 : 30) என் இறைவன் திருவாய் மொழிந்திருப்பதால் அவர் கற்பித்தது தமிழ்மொழியே என்பதில் ஐயமில்லை.

ஆதம் தமிழ் நாட்டினர் என்பதற்கு வரலாற்றுக் காலந் தொடங்கி அரசர்களும் புலவர்களும் பொதுமக்களும் ஆதன் என்ற பெயரைப் பரவலாகப் பூண்டிருந்ததை நம் இலக்கியங்கள் வாயிலாகவும்,[9]

9. புறம் : புறம் 71, 153, 335, 338, 379, 389, அகம் 216, ஐங் 1-10, கற் 81

10. கொடுமணல் போன்ற பல இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகளிலும் பாண்டிய நாட்டுப் பகுதியில் கண்டறியப்பட்ட பழந்தமிழ்க் கல்வெட்டுக்களிலும் ஆதன் என்ற பெயர் பரக்கக் காணப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



பண்டைய தமிழக ஊர்களில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளில் கிடைத்த பழந்தமிழ் எழுத்துப் பொறித்த மட்கல ஓடுகள் வாயிலாகவும்[10] ஆழமான சான்றுகள் பல கிடைத்துள்ளன.

தமிழகம் எங்கணும் ஆதன் பெயரால் அமைந்த ஆதனூர், ஆதமங்கலம், ஆதம்பாக்கம் போன்ற ஊர்களை எண்ணி மாளாது. எனவே இறைவனால் அனுப்பப்பட்ட முதல் தூதன் தமிழ் பேசிய தமிழனே. ஆதலால் பன்னூறு மொழிகள் இவ்வுலகில் இருக்கும் போது அவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாது தமிழ்மொழியை முதன்மையாகக் கொண்டமையால் தமிழே இறைமொழி — தேவ மொழி என உரைப்பதில் தவறே இருக்க வாய்ப்பில்லை. ஆதலால் உலக மாந்தர் அனைவருமே தமிழ்மொழியில் பெயரிடுவதே பொருத்தமுடையதாகும் என வலியுறுத்தலாம். இது ஒரு மொழியை மட்டும் இறைமொழி, தேவமொழி எனக் கொண்டு மற்றைய மொழிகளைப் புறக்கணிப்பதற்குக் கரணியம் ஏதுமில்லை என்பதற்கான கூற்றே அன்றி உரிமைப் போரன்று.

மெய்ம்மை என்றும் எவர்க்கும் பொது. உலகில் உள்ள அனைத்து மக்களும் அவரவர் தாய்மொழி வாயிலாகவே இறைவன் திருவாய் மொழிகளை அறிவதும், அவரவர் தாய்மொழியில் தத்தமக்குப் பெயர் வைத்துக் கொள்வதும் இறைவன் திருவிருப்பம் என்பதே உலகியல் செயற்பாடாக அமைந்துள்ளதை ஆய்வாளர் நன்குணர்வர்.

இசுலாமிய உடன்பிறப்புகள் திருக்குராணைப் போலவே அண்ணல் பெருமானாரின் நடைமுறை வாழ்க்கையையும், (அதீசு) சொல்லையும் வாழ்க்கை நெறிச் சட்டங்களாக ஏற்றுக்கொண்டவர்கள். அண்ணலார் தம் இனத்தின்மீதும் மொழியின்மீதும் அளவிறந்த பற்றுக் கொண்டவர் என்பதையும் முன்னரே கண்டோம். அண்ணலார் தம்மிடம் பெயர் சூட்ட வந்த குழந்தைகளுக்குத் தம் திருவாயிலிட்ட பேரீச்சம் பழங்களை ஈந்து அரபி மொழியில் நல்ல பெயர்களைச் சூட்டினார் என்று கற்கின்றோம். அண்ணலார் நடைமுறை வாழ்க்கையில் (அதீசு) காட்டிய தாய்மொழிப் பற்றை நம்மனோரும் நடைமுறையில் கைக்கொள்வதும், நமது மொழியில் தூய நல்ல பொருள் பொதிந்த அழகிய பெயர்களைச் சூட்டிக் கொள்வதும் இறைநெறிச் சட்டத்தின்பாற்பட்டதே என்பதில் ஐயமில்லை.

இறை நோக்குக்கு மாறாக இசுலாமியப் பெயர்களெனத் தமிழர்கள் சூட்டிக்கொள்ளும் பெயர்கள் யாவும் மதப் பெயர்களல்ல வென்பதனை மற்றோர் எடுத்துக்காட்டின்வழியும் அறியலாம்.

— தொடரும்...

படிப்பகம்

www.padippakam.com

# கலகம்

"மரண தண்டனைக்கு எதிராகத் தமிழக எழுத்தாளர்கள் நடத்திய மாநாட்டிற்குச் சென்றிருந்த செய்திகளைச் சொல்லிக் கொண்டே வந்த சுடரிடம், "சரி சுடர் — மாநாட்டின் இறுதியில் யாரோ ஒருவர் குடித்துவிட்டு வந்து எசு.வி. இராசதுரை அவர்களின் கையைப் பிடித்து இறுக்கி, நீதான் 'இந்தி, இந்து, இந்தியா' எழுதிய முட்டாளா, மடையனே, டேய் கிழவா... என்று எழுத்தில் அடுக்கிவிட முடியாத படியாக வெல்லாம் பேசியதாகவும், தொடர்ந்து ஏதோ சிக்கல்கள் ஏற்பட்டதாகவும் அங்குப் போய்வந்த நண்பர் ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார். என்ன நடந்தது சுடர் ?".

— இவ்வாறு நான் கேட்டவுடன், "அது நீண்ட செய்தி நம்பி — ஆனால் அதை முழுமையாய் நாம் தெரிந்து கொள்வது கட்டாயமானது.

அண்மையில் பின் — புதுமையியம் (போசுட் மார்டனிசம்) எனும் கோட்பாட்டின்கீழ் இயங்குகின்ற சிலர் தமிழகத்தில் 'கலகம் பிறந்தால்தான் நயன்மை பிறக்கும் எனும் கருத்திலோ என்னமோ — இப்படிக் கலக(!)ங்கள் செய்து கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு எந்த ஒன்றையும் பொதுப்படுத்திப் பார்க்கக் கூடாது என்பது அடிப்படை நோக்கம்.

தமிழ் — என்று பொதுப்படுத்திடக் கூடாது. தமிழ்கள் — என்றுதான் சொல்ல வேண்டும். இது குறித்துத் தென்மொழியில் தொடர்ந்து வந்து கொண்டிருந்த தருக்கத்தை நீ அறிவாய். தமிழர்கள் எனப் பொதுப்படுத்திவிடக் கூடாது. 'பொது' — என்ற சொல்லே தமிழில் இல்லை, அது பார்சிய சொல் — என்பதாகச் சொல்லுகின்றனா அவர்கள்.

குடிப்பது உடல் நலக்கேடு, அறிவை ஒருவரின் இயக்கத்தை மயக்குவது — என்று ஒரு பொது ஒழுங்கு ஏற்படுமானால் அதெப்படி அது பொது ஒழுங்கெனப் படலாம் என்று கூறிக் குடிப்பது — குடித்துவிட்டு ஆடுவது — அலைவது — அரட்டுவது இவை யெல்லாம் ஒழுங்கெனும் கூட்டை அறுப்பதாகப் பிதற்றுகின்றார்கள் அவர்கள்.

இப்படிப் பிதற்றுவதோடு அல்லாமல் குடித்துவிட்டு வந்து கலக(!)ம் செய்வதை இவர்களின் அரசியல்வழி நயன்மைப்படுத்தவும் செய்கின்றனர்.

இந்தியத் தேசம் பொய்மை என்பது போலவே, திராவிடத் தேசம் பொய்மை என்பது போலவே தமிழ்த் தேசம் என்பதும் பொய்யாம்.

தமிழ்த்தேசம் எனப் பொதுப்படுத்துவது தவறு. எல்லாவற்றையும் தனிப்படுத்த வேண்டும். தாழ்த்தப்பட்டோரைத் தனிநிலைப்படுத்தவேண்டும்.

தாழ்த்தப்பட்டோரில் பள்ளரைத் தனிப்படுத்தல் — பறையரைத் தனிமைப்படுத்துதல், சக்கிலியரைத் தனிமைப்படுத்துதல் — இன்னும் குக்குலங்களையெல்லாம் தனிமைப்படுத்தி எழவைத்தல் — எழுச்சி கொள்ள வைத்தல் — என்பதாக இவர்கள் எண்ணுவது மட்டும் பொதுமை உணர்வினதாம்.

— இப்படியே கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்த சுடரின் வேகத்திற்கு என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"இரு சுடர் சற்று அமைதியாய்ச் சொல். நீ சொன்னதில் அவர்க்கு என்ன நடந்தது என்று

படிப்பகம்

www.padippakam.com



அறிந்துகொள்ளவே முடியவில்லை. நீ என்னமோ தொடர்ச்சியாய்ப் பேசிக் கொண்டிருக்கிறாய்" — என்று நான் கேட்டவுடன்.

"இப்படியான இவர்கள்தாம் நம்பி. அந்த எழுத்தாளர் மாநாட்டிற்கு வந்திருந்தனர். அவர்கள் சொல்லுகிற அரசியற்படி அங்கு நிலவுகிற ஒழுங்கு குலைக்கப்பட வேண்டும் என்பது அவர்கள் எண்ணமாக இருக்கலாம்;

அல்லது குழுவினரிடமிருந்து விலகியவர்கள் இந் நிகழ்ச்சியை நடத்துகிற பகைமையாக இருக்கலாம்;

அல்லது முட்டக் குடித்துவிட்ட தம் மூளைச் சொறிவுக்கு யாரையாவது வந்து சொறிந்து பார்க்க வேண்டுமெனும் உளைச்சலாக இருக்கலாம்—

அது என்ன காரணம் என்று அவர்களுக்கே தெரியுமா என்று நமக்குத் தெரியவில்லை.

இராசதுரையை "டேய் கிழவா — நீ பெரிய அறிவாளியா?" — என்றார் அந்தக் குடிவெறிக் கோமகன்.

"இல்லையப்பா — நீ அறிவாளிதான்.... எனக்கு உன் அறிவெல்லாம் வராது" — என்று அமைதிப்படுத்தினார் இராசதுரை.

"என்னடா நீ பெரிய மயிரா.... (இப்படியாக இழிசொற்களை அடுக்கியவர் தொடர்ந்து....) வரயாடா (என்று சொடுக்குப் போட்டு) என்னுடன் ஒரு மணி நேரம் தருக்கமிட (விவாதிக்க) வரயா"

— என்று அந்தக் கோமகன் ஒருவேளை இராசதுரையையும் சாராயக் கடைக்கு அழைத்தாரோ என்னமோ தெரியவில்லை — அழைத்துக் கொண்டிருந்தார்.

எசு.வி. இராசதுரை அதிர்ச்சியாய் நின்று கொண்டிருந்தார் அவரால் ஏதும் சொல்ல முடியவில்லை.

பொது ஒழுங்கு ஒன்று தேவையில்லை என்று கூத்தாடும் இவர்களின் குடிவெறிப் பேச்சுகள் உழவர்களிடையே இருக்கும் உழைப்பு ஒழுங்கில் போய்த் தலையிட முடியுமா, என்ன?

அதென்ன இப்படி நடவு செய்கிறீர்கள் — அதிலென்ன ஒழுங்கு — மாற்றி நடவு செய்யுங்கள் என்று குடிவெறி பிடித்துக் கத்திப் பார்க்கட்டுமே — இவர்கள்!

வீட்டில் சோறு போடுவதற்கும், குடிக்கக் காசு புரள்வதற்கும், காசு கொழுப்பேறிப் புரள்கிற இவர்களின் தினவுகளுக்கேற்ற அரசியல் — அதற்கேற்ற வாழ்முறை!

சூழ்நிலைதான் வாழ்முறையைத் தீர்மானிக்கிறது என்றால், இவர்களின் சூழ்நிலை இவர்களுக்கு இந்த வாழ்முறையைத்தான் தீர்மானித்திருக்கிறது போலும்.

இவர்கள் பேசுகிற அரசியல் உண்மையிலேயே பொருளுடையது என்பதாக இவர்களுக்குப் படுமானால் — அதற்கென இயக்கம் கட்டிப் பரப்பி — அமைப்பாக்கட்டுமே!"

— என்று சுடர் சொன்னவுடன், நான் இடைமறித்துச் சொன்னேன்.

"அதெப்படி சுடர் அவர்கள், அமைப்பு என்கிற உருவாக்கத்தை மட்டும் எப்படி ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள். அமைப்பு, இயக்கம், கட்சி — இவற்றிலெல்லாம் அவர்களுக்கு உடன்பாடு இல்லை.

— இவர்களுக்குக் கலகம்தான் அரசியல் வெளிப்பாடு!

படிப்பகம்

www.padippakam.com



அதுகூட அண்ணல் அம்பேட்கர் சொன்ன 'கலகம்' — என்று எண்ணிவிடாதே. அது புரட்சிக்கான கலகம் — குமுக மாற்றத்திற்கான கலகம்.

இவர்கள் சொல்வதும் — செய்வதும் குடிவெறியாட்டம் ஆடுவதற்கான. குடிமையின் பொது ஒழுங்கமைவுகளுக்கு எதிரான கலகம்.

அதற்குத் தகுந்தாற்போல் ஒவ்வோர் அறிஞரின் கருத்துரைகளையும் பயன்படுத்திக் கொள்வார்கள்.

மார்க்கசையும் பேசுவார்கள், பெரியாரையும் பேசுவார்கள், அம்பேட்கரையும் பேசுவார்கள்...

"அவர்களெல்லாம் குடிக்கவில்லையா...." — எனக் கேட்டு தங்களின் குடித்தாகத்தை நயன்மைப்படுத்திக் கொள்ளவும் எவ்வளவு நேரமாகப் போகிறது அவர்களுக்கு. எல்லாம் கலகம் தானே.....

— என்று கூறிக்கொண்டிருந்த என்னிடம் மீண்டும் சுடர் சொன்னான்.

"ஆம் நம்பி உண்மைதான். உண்மைகள் நடையிடமுடியாத நேரங்களில் பொய்கள் ஆடிக் கொண்டுதாமே இருக்கும்"

நம்பி

## காஞ்சி சங்கராச்சாரியின் பார்ப்பனிய வெறிப் பேச்சு!

"தீசம்பர் ஆறு, இராமர் கோயில் (ஆலயம்) பாரு!" — என்று சொல்லி இலக்கக் கணக்கான குடுமி விடலைகளையும், கூலிப் படையூர்களையும் செங்கல் எடுத்துவரச் சொல்லி அணி திரட்டிச் சென்று பாபர் மண்டபத்தை இடிக்க அத்துவானிக் கும்பல் இன்று கீழ்ப்பாய்ச்சலை இறுக்கிக் கட்டிக் கொண்டு இராமர் கோயிலைக் கட்ட முனைந்துள்ளது.

விசுவ இந்து பரிசத்தையும், சிவசேனையையும் அதற்கான பொறுப்பியக்கங்களாக ஆர்.எசு.எசு. இயக்கிக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் பாபர் மண்டபம் மீண்டும் கட்டப்பட வேண்டும் என அண்மையில் இசுலாமிய இயக்கங்கள் விடுத்த கோரிக்கைகளுக்குக் கருத்தறிவித்துத் தம் பார்ப்பனிய நமைச்சல் தீரப் பேசியிருக்கிறார் சங்கராச்சாரி.

"பாபர் மண்டப இடிப்பை இப்போது நினைவுகூர்வதே தவறு. இப்போது அந்த இடத்தில் இராமர் அமர்ந்துள்ளார். அந்த இடம் அவருக்குச் சொந்தமாகிவிட்டது. அந்த இடத்தில் கோயில் கட்டுவதா, வேண்டாமா என்ற கேள்வியை விசுவ இந்து பரிசத்திடம் தான் கேட்க வேண்டும்" — என்று தம் திருவாய்(!) மலர்த்தியுள்ளார் அவர்.

பார்ப்பனக் கொழுப்பேறிய அவரின் பேச்சு எப்படி இருக்கிறது. கண்ணுக்குக் கண்ணாய் நடந்திருக்கிற நிகழ்ச்சிகளே இப்படிப் பேசப் பெறுகிறபோது நம் அருந்தமிழின வரலாற்று நிகழ்வுகள் எந்த அளவில் புதைக்கப்பட்டிருக்கும்.

நாம் விழிப்படைவது எப்போது?

— யாளி

www.padippakam.com

# இந்திய அரசியல் ஆட்டக்களமும் ஆரியப் பார்ப்பனர்களும்

— கரடிப்பட்டி கண்ணன் —

சிறுசிறு இனக் குழுக்கள் சிற்றரசுகளாகவும், சிற்றரசுகள் சிதைந்து பேரரசுகளாகவும் ஆகி அவையும் ஆங்கிலேய வல்லரசால் சிதைக்கப்பட்டு. இந்தியத் தேசியமாக உருவாக்கம் பெற்ற இப் பெரு நிலப்பரப்பு தொடர்ந்து ஆரியப் பார்ப்பனர்களின் ஆளுமைக்கான அரசியல் ஆட்டக்களமாகியுள்ளது. அரசியல் ஆட்டக் களத்தில் இரண்டு பக்கமும் ஆரியப் பார்ப்பனர்களும் அவர்களின் கருத்தியலுக்குச் சார்புள்ளவர்களுமே ஆடிக் கொண்டிருக்கின்றனர். அடித்தளத்திலுள்ள உழைக்கும் மக்கள், உதைபடும் அல்லது அடிபடும் பந்துகளாகவும் பார்வையாளர்களாகவும் மட்டுமே ஆக்கப்பட்டுள்ளனர். இதைக் காலங் கடந்துதான் மக்கள் சிந்தனையாளர்கள் புரிந்துகொண்டுள்ளனர். இன்னும் பல சிந்தனையாளர்கள் ஆரியப் பார்ப்பனிய இந்தியத் தேசியத்திற்குச் சார்பாகவே இயங்கிக்கொண்டுள்ளனர்.

பேராயம் (காங்கிரசு) என்ற பெயரில் இந்திய மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்ததாகக் கூறும் நடித்த ஆரியப் பார்ப்பனர்களும் தரகு முதலாளிகளும் காலந்தோறும் தங்கள் புனைவை மாற்றிக் கொண்டே வருகின்றனர். ஆரியத் தலைமையுள்ள அல்லது அதற்கு சார்புள்ள பேராயக் கட்சிக்குள் இருந்த பார்ப்பனர்கள் தங்களின் தனியான ஆளுமையைச் செலுத்தக் காலத்தை நோக்கிக் காத்திருந்தார்கள். இராசீவ் படுகொலைக்குப் பின் நரசிம்மராவ் தலைமையில் பார்ப்பன ஆட்சி அமைந்தது.

ஓர் எதிர்க் கொள்கையையும் அக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற நாடுகளையும் காட்டித்தான், தங்களிடம் முரண்படுகின்ற மக்களைத் தங்கள் ஆளுமைக் கொள்கைக்குச் சிறிது காலத்திற்கேனும் உடன்பட வைக்க முடியும். அவ்வகையில் தான் இசுலாம் மதக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற பாகித்தானையும் புத்தமதக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற சீனாவையும் தங்கள் எதிரியாகக் காட்டி, இங்குள்ள பல்வேறு தேசிய இனங்களையும் மக்களையும் ஆரியப் பார்ப்பனிய அரசு ஒடுக்கி வருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



பாபர் மண்டபம் இருந்த இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்று ஒரு பொய்யான கதையைப் பரப்பி, மக்களிடம் இந்துமத வெறியை ஊட்டி, இராமருக்குக் கோயில் கட்ட வேண்டுமென்று பாரதீய சனதாக் கட்சியினர் பாபர் மண்டபத்தை இடித்துத் தள்ளினர். இதற்குப் பேராய(காங்கிரசு)க் கட்சியிலிருந்த நரசிம்மராவும் மற்ற பார்ப்பனர்களும் மறைமுகமாகத் துணை போயினர். இதற்குப் பின் பாரதீய சனதாக் கட்சியைத் தங்கள் முதல் எதிரியாகக் கருதியிருந்த இங்குள்ள இசுலாமிய மக்கள் பேராயக் கட்சியையும் தங்கள் எதிரியாகக் கருதினர்.

இதனால் அடுத்து வந்த இந்தியப் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் பேராயக் கட்சியும் பாரதீய சனதாக் கட்சியும் அதிக இடங்களைப் பெற்றிருந்தும், தனியாக ஆட்சி அமைக்க முடியவில்லை. சில மாநிலக் கட்சிகளின் துணையோடும் போலிப் பொதுவுடைமைக் கட்சிகளின் துணையோடும் ஆட்சி அமைத்த தேவகவுடா மற்றும் குசுரால் தலைமையிலான ஆட்சிகளுக்கு வெளியிலிருந்து ஆதரவு கொடுத்த பேராயக் கட்சி அவற்றை அடுத்தடுத்துக் கவிழ்க்கவே, பாரதிய சனதாக் கட்சியினர் வாச்சுபேய்யி தலைமையில் ஆட்சி அமைய வழியமைந்தது.

இந்தியத் துணைக்கண்டம் பல்வேறு மொழிவழித் தேசியங்களையும் பண்பாடுகளையும், ஏற்றத் தாழ்வான பொருளியல் வளர்ச்சிகளையும் கொண்ட ஒரு பெருநிலப் பரப்பு என்பதை மறைத்துவிட்டு, ஆரியப் பார்ப்பனர்களும், தரகு முதலாளிகளும் இந்தியா அல்லது பாரதம் ஒரே நாடு என்றும், மக்கள் அனைவரும் ஒரே பண்பாட்டைக் கொண்டவர்கள் என்றும் ஓயாது பொய்யைப் பரப்பி வருகின்றனர். ஆயினும், அண்மைக் காலத்தில் வெவ்வேறு தேசிய இனங்களுக்கிடையிலான எல்லைக் கலவரங்களும், தண்ணீர்ச் சிக்கலும் நடுவண் ஆரியப் பார்ப்பன அரசாலும் அந்தந்தத் தேசிய இனங்களின் மக்களுக்கு எதிராக இயங்குகின்ற கட்சிகளாலும் மூடி மறைக்கப்படுகின்றன.

மொழிவழித் தேசியம் முழுமையாக வளராததற்கும், விடுதலையை நோக்கி அடுத்த கட்டத்திற்குச் செல்லாததற்கும் ஏற்றத் தாழ்வான சாதிய அமைப்பும் — அதைக் கட்டிக் காக்கின்ற இந்து மதக் கருத்தியலும் ஆரியப் பார்ப்பனர்களுமே கரணியம். இந்தியத் தேசியக் கருத்தியலையும் அதன் சட்ட அமைப்பையும் ஏற்றுக் கொண்டு ஆட்சிக்கு வருகின்ற மாநிலக் கட்சிகளை இணைத்துக் கொண்டே அண்மைக்கால ஆரியப் பார்ப்பனிய ஆட்சி

படிப்பகம்

www.padippakam.com



நடைபெற்றுக் கொண்டுள்ளது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மதவழிச் சிறுபான்மையினர் முதலானோரை முன்னேற்றுவதாகக் கூறிக்கொள்ளும் சில மாநிலக் கட்சிகளும், இறுதியில் ஆரியப் பார்ப்பனரிடம் இணைந்து, தங்களின் பங்கை மட்டும் பெற்றுக் கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றன.

முன்பு பேராயக் கட்சி நடுவண் அரசில் இருந்தபோது, மாநிலக் கட்சிகளை உடைத்து, அவற்றில் ஒன்றைத் தனக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டதைப் போல், பாரதிய சனதாக் கட்சியும் இன்று புற்றீசல் போல் தோன்றிக்கொண்டுள்ள மாநிலக் கட்சிகள் சிலவற்றைத் தனக்குத் துணையாகச் சேர்த்துக் கொள்கிறது.

இன்று அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வல்லரசு நாடுகளில் இரண்டு மூன்று கட்சிகளே இருந்தாலும், ஒன்று மாற்றி ஒன்று ஆட்சிக்கு வந்தாலும், மற்ற நாடுகளைச் சுரண்டி, ஒடுக்கித் தங்கள் நாடுகளின் முதலாளியப் பொருளியல் கொள்கையைக் கட்டிக் காத்தே வருகின்றன.

அதைப் போலவே இந்தியாவிலும் ஆரியப் பார்ப்பனர்களையும் தரகு முதலாளிகளையும் தலைமையாகக் கொண்ட பேராயக் கட்சியும் பாரதிய சனதாக் கட்சியும் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்றன. மற்றக் கட்சிகள் அவற்றுக்குத் துணை போகின்றன.

இரண்டு கட்சிகளுமே ஆரியப் பார்ப்பனியச் சார்புக்கும் பெரும் தரகு முதலாளிகளுக்குமே சார்பாக இயங்குவதை, அவற்றின் நடைமுறையிலிருந்தே நாம் பார்க்கலாம். இந்திய நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுச் சட்டத்திலும், வாழ்நாள் காப்பீட்டுக் கழகத்தின் சில பங்குகளை வெளிநாடுவாழ் இந்திய முதலாளிகளுக்கும், பன்னாட்டு முதலாளிகளுக்கும் ஒதுக்குவதில் அவர்களின் உண்மை முகம் வெளிப்பட்டது.

ஆரியப் பார்ப்பனர்களுக்கு எதிரி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மதவழிச் சிறுபான்மையினரே தவிர, அவர்கள் முழுமையாக ஒருவருக்கொருவர் எதிரியாக நடந்து கொள்வதில்லை. ஆனால், குமுக நிலையிலும் பொருளியல் நிலையிலும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களே ஒருவரோடு ஒருவர் மோதித் தாங்களும் அழிகின்றனர்; ஆரியப் பார்ப்பனரிடம் அடிமையாகின்றனர்.

முன்பு இசுலாமியரையும் புத்த மதத்தினரையும் எதிரியாகப் பார்த்த ஆரியப் பார்ப்பனியம் அண்மைக் காலமாகக் கிறித்தவ

படிப்பகம்

www.padippakam.com



மதத்தையும் எதிரியாகக் கொண்டு தாக்குதல் தொடுத்து வருகிறது. தங்களிடம் அடிமையாக இருக்கும் பழங்குடி மக்களை மதம் மாற்றுவதாகக் குற்றம் சாட்டுகிறது. உழைக்கும் மக்களை ஆளுமை செய்வதற்கான உளவியல் ஒடுக்குமுறையே எல்லா மதங்களின் கருத்தியலும் என்பதை மக்கள் உணர வேண்டும்.

இந்தியத் தேசியம் என்னும் அரசியல் ஆட்டக்களம் இருக்கும் வரை வேறு எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அல்லது வேறு அரசியல் கொள்கையைப் பின்பற்றினாலும், தேசிய இனங்களின் நிலை இறுதியில் ஆரியப் பார்ப்பனியத்திடம் அடிபணிவதேயாகும்.

அரசியல் ஆட்டக்களத்தை மொழிவழித் தேசிய எல்லைக்குக் குறுக்கும்போதும், ஒடுக்கப்பட்டோர் அரசியல் ஆளுமைக் கொள்கையை முதன்மைப்படுத்தும் போதும் மட்டுமே, ஆரியப் பார்ப்பனியமும், அதை முட்டுத் தாங்குகின்ற வல்லரசுகளும் வீழ்த்தப்படும்; ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களும் விடுதலை பெறுவர். கடந்த கால இந்திய அரசியல் வரலாற்றையும் நடைமுறையையும் கூர்ந்து கணிப்போம். தமிழக மக்களுக்கான தேசியத்தை வென்றெடுப்போம்!

*

## அறிஞர் கு.ச ஆனந்தன் மறைவு!

தென்மொழி அன்பரும் பாவலரேறு ஐயா அவர்கள்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவரும், சட்டத்துறை வல்லுநரும் தமிழ் அறிஞருமான சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன் அவர்கள் கடந்த துலை 16 அன்று (2.11.'99) இயற்கையெய்தினார் என்பதை அறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

'வழிபாட்டில் வல்லாண்மை', 'திருக்குறள் ஆய்வு', 'தன்னாட்சி' முதலான பயன்மிகு நூல்களைப் படைத்தளித்தவர் திரு. கு.ச. ஆனந்தன். அவரது 'இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும்' என்னும் நூல் தென்மொழி வெளியீடு. 'மலர்க மாநில சுயாட்சி', 'திருக்குறள் உண்மைப் பொருள்' என்னும் நூல்கள், தமிழ்நாட்டரசின் பரிசு பெற்றவை. இறுதியாக வெளிவந்த அவர்தம் நூல் 'இந்தியாவில் தேசிய இனங்களும் தமிழ்த் தேசியமும்' என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. ஆனந்தனின் பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும் தென்மொழியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# முனைப்பு

—ஒள்ளியன்—

அகண்ட இஞ்ஞாலத்தின் பிடியினின்று விலகி நெடுந் தொலைவு சென்றால் இருள். எங்கும் இருள்...

நெருப்புப் பிழம்பாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும் கதிரவன்கள் ஆயிரக் கணக்கில் இருந்தும், ஏன் இந்த இருள்.

ஒளி வெள்ளத்துள் இப்புடவி மூழ்கிவிடவில்லையே!

காரிருளுக்குள்ளல்லவா கோடிக் கணக்கான கோள்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன!

கதிரவன்கள் அவ்விருளை ஒளியால் கிழிப்பதில்லையே?

ஒளி இருளுள் செலலுகிறதே அல்லாமல் இருளை ஒளியாக்குவதில்லைதானே!

ஒளியின் இருப்பு அது தடுக்கப்பெறுகிற பொழுதன்றோ அறியப் பெறுகின்றது!

கதிரவனின் வல்லொளி இத்தரையால் தடுக்கப் பெறுகையிலேயே இத்தரை ஒளி பெறுகிறது.

ஒளிஅலை முன் அல்லாமல் அக்கால் எதிர்ப்புறம் இருக்கிற இவ் உலகப் பகுதி இருளாகிறது.

உலகம் தனித்து ஒளிர்வதில்லை; அதுபோலவே அண்டமும் தனித்து ஒளிர்ந்து கொண்டிருக்கவில்லை.

நீண்ட அண்ட வெளிக்குள் ஒளி புதைந்திருக்கிறது.

இருளுக்குள் ஒளி அமிழ்ந்திருப்பதுபோலவே ஒளிக்குள் இருளும் அடர்ந்து கிடக்கிறது.

ஒன்றைச் சாராமல் வேறொன்றில்லைதானே.

கதிரவனைச் சார்ந்துதானே இப்புடவி இயங்குகிறது, ஒளிர்கிறது.

கதிரவனைச் சார்ந்துதானே இப்புடவி சுழல்கிறது, இருள்கிறது.

அனைத்தும் சார்ந்தவைதாம்.

புடவி தன்னிலைப்பட்டதன்று; அதுபோன்றே அனைத்தும்.

இன்று என்று ஒன்றில்லாததுபோலவே நேற்றும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



நேற்றைச் சார்ந்ததுதான் இன்று, இன்றைத் தொடர்ந்துதான் நாளை.

நேற்றிலிருந்துதான் இன்று வளர்கிறது, இன்றிலிருந்துதானே நாளைய மலர்ச்சி.

நேற்றையவற்றை விலக்கிவிட்டு இன்று ஒன்று கோலோச்சி நின்றுவிட முடியாததுபோலவே, இன்றையனவற்றைத் தள்ளிவிட்டு நாளை நிமிர முடியாதன்றோ ?

நேற்றைய மாந்தக் குமுக வளர்ச்சியின் தொடர்ச்சிதான் இன்றைய குமுக வாழ்வு.

இன்றைய குமுக வாழ்வின் தொடர்ச்சிதான் நாளைய மலர்ச்சி.

நேற்றின் அறிவுத் தொகுப்பே இன்றைய வாழ்வின்வடிவம்.

ஆனால்...

நமக்குள்மட்டும் எத்தனை 'நான்'கள்.

நேற்றையதை மறுத்த இன்றைய 'நான்'!

எதுவாயினும் அதில் 'நான்' — என்கிற நிமிர்வுகள்.

'என்'னின் படைப்பையொத்து எவரும் படைத்திட முடியாது என்கிற 'நான்'!

'என்'னின் கருத்து; என் தனிக் கருத்து என்கிற 'நான்'.

சரியாய்ச் செய்யப்பெற்றிருக்குமானால் அது 'நான்'
பிழைபட இருக்குமானால் அது 'நான் இல்லை'!

எந்த அளவு வேடிக்கையானது இது.

முரண்களின் வளர்ச்சிதானே அனைத்தும்.

நிலத்தைச் சமப்படுத்தி, உழுது, விதைத்துக் காத்து அறுத்தெடுக்கிற உழவனின் படைப்பாக்கங்களில் அவன் அவை தம்முடைய படைப்பு என்று பதித்துக் கொள்வதில்லையே.

ஆலையிலும் தொழிற்சாலைகளிலும் உழைத்து உருவாக்கி வெளிச் செல்லும் கருவிகளுக்குப் பின்னால் தொழிலாளி எவரும் ஓடி இது தம்முடையது எனப் பதிப்பதில்லைதானே.

ஆனால் அதன் பதிப்புகளை ஆண்டைகள்தாம் செய்கிறார்கள்.

குழுமங்களின் முத்திரைப் பதிப்பில் படைப்பாளியின் உருவாக்கங்களல்லவா மூழ்கிவிடுகின்றன.

பெற்றெடுத்த குழந்தை இது உங்களின் குழந்தை எனப் பெற்றவள்

படிப்பகம்

www.padippakam.com



சொல்வதும், அது பிழை செய்கையில் உன் குழந்தை பார்
இப்படிச் செய்கிறது எனத் துணைவியைச் சொல்வதுமான
தனிநிலைகள்தாமே குடும்பத்துள்ளும்.

நிலவும் ஆளுமைப் படிவத்தின் நிழலில்தாமே இவை நிகழ்கின்றன!

என் எழுத்து, என் பேச்சு, என் படைப்பு என்பது எத்துணைப்
போலிமையானது!

உண்டமையாளுமையின் முத்திரைகளுக்குள் மூழ்கிப் போகின்ற
உழைப்பாளிகளின் படைப்புப் போலன்றோ பலரின் கருத்துகள்
ஒன்றுள் மூழ்கிப்போகின்றன.

சிறுகச் சிறுக மணியாய் வெளிப்பட்டிருக்கிற கோடிக் கணக்கான
அறிவுத் துகள்களின் உலகக் குவியலுக்குள் இன்று திடுமெனப்
புகுந்து ஒற்றை மணியெடுத்து மெருகூட்டிக் காட்டி இது என்னின்
படைப்பு என்பது எவ்வளவு போலிமையும் வேடிக்கையுமானது.

உழைப்பின்மீது ஆளுமை செய்வது ஆண்டைமையெனில்
அறிதலின் மீது ஆளுமை செய்வதும் ஆண்டைமைதானே.

நேற்றைய உலகின் பேரறிவு வளர்ச்சிக்குள் ஒவ்வொரு
அறிதலுமன்றோ அடங்கி வளரும்.

உயிர்மப் படிநிலை வளர்ச்சியில் எந்த உயிர்ம வளர்ச்சியும் எந்த
உயிர்மத்துக்கும் தனிநிலையுடையதன்று போன்றதன்றோ அறிவும்.

உழைப்பைப் பொதுவெனின் அறிவும் அன்றோ பொது.

உழைப்பின் விளைச்சலைப் பொதுவாக்க முனைகிற முனைவர்கள்
தங்களின் அறிவையன்றோ 'பீடத்'தில் நிறுத்திக் கொள்கின்றனர்.

படைப்புகளில் ஒளிர்கிற பொதுமை, அப்படைப்பின்மீதான உரிமையில்
இல்லையே.

நம்மின் உருவாக்கங்களைப் பொதுமையாக்கச் சொல்லுகிற நம்
அறிவைப் பொதுமையாக்கப் பழக வேண்டாவா?

பொதுமைக்குள் நாம் பழகினால்தானே
பொதுமை நமக்குள் பழகிட முடியும்.

ஆம்... பொதுமை அறிவுள்ளங்களே....

'என்' என்கிற 'நான்' என்கிற
முனைப்பு முகடுகளை
பொதுமை எனும் தீப்பிழம்புக்குள் சாம்பலாக்குவோம்.

ஒளிரட்டும் பொதுமை அறிவு..... ✳

படிப்பகம்

www.padippakam.com

# நல்ல முடிவு

—மாந்தநேயன்—

பணியிலிருந்து ஒய்வுபெற இன்னும் இரண்டு மாதங்களே இருக்கின்றன. முப்பது ஆண்டுக்கால ஆசிரியப் பணி. இதோ முடியப் போகிறது. அரசு எனக்கு ஓய்வு கொடுத்தாலும் என்னுடைய உடலோ உள்ளமோ இன்னும் ஓயவில்லை. பணி முடிந்தாலும் வேறு எதையாவது செய்துகொண்டிருக்க வேண்டும் என்று உள்ளம் ஊக்கப்படுத்துகிறது. இப்படியாக எண்ணிக்கொண்டே சாய்வு நாற்காலியில் படுத்திருந்தேன். யாரோ வெளியிலிருந்து கூப்பிடுவது போல் இருந்தது. கதவைத் திறந்து பார்த்தேன். எதிர்வீட்டு மணி.

"வாங்க தம்பி, வாங்க.... உள்ளே வாங்க"

"வர்ரேங்க ஐயா, ஒரு சேதியாத்தான் உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்"

"வாங்க உட்கார்ந்து பேசலாம் வாங்க...." என்று நாற்காலியை எடுத்துப் போட்டு உட்காரச் சொன்னேன்.

"ஒண்ணுமில்லீங்க ஐயா நம்ம பையனை மூணு மாதத்திற்கு முன்னாடி பள்ளிக்கூடத்தில சேர்த்தேனில்லீங்க...."

"ஆமா.... நல்லா பாட்டு, கதைன்னு வெளுத்து வாங்கிறானே மூணு மாதத்திலேயே. எனக்குக்கூட வியப்பா இருந்தது. என்னடா பையன் இப்படி மாறிட்டானேன்னு. சாலையில அந்தப் பக்கம் போனா ஓடிவந்து வணக்கம் சொல்றான்.... மூணு அகவைப் பையனான்னு எனக்கே வியப்பா இருக்குப்பா...."

"ஆமாங்க ஐயா... வீட்டுக்கு யாரு வந்தாலும் விடமாட்டான். வாங்க, வணக்கம்பான். தண்ணீர் குடிக்கிறீங்களா..... தேநீர் சாப்பிடுறீங்களா..... அப்படின்னு வருகிறவங்களைத் திக்குமுக்காட வச்சிடறான்."

"சரி... சொல்லுங்க. அவனுக்கு இப்ப என்னாச்சு?"

"நாம அஞ்சு ஆண்டா மலைக்குப் போகிறோமே, இந்த ஆண்டு அவனையும் அழைச்சிகிட்டு போகலாமேன்னு அவனுக்கும் மாலை போட்டேன். அதனால பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க ஐயா....!

படிப்பகம்

www.padippakam.com



"அப்படியா, என்னப்பா இது வேடிக்கையா இருக்கு. பள்ளிக் கூடத்துக்கும் மாலை போடறதுக்கும் என்னப்பா இருக்கு.... ஏன் வரவேண்டாங்கிறாங்க?...."

"அவுங்க சில காரணங்கள் சொல்றாங்க...."

"என்ன காரணம் சொல்றாங்க?"

"மாலை போட்டா, பையன் படிப்புக் கெட்டுப் போயிடுமாம். கோயில் அங்க, இங்கேன்னு அழைச்சிகிட்டுப் போனா அவனுக்குக் குழப்பமாக இருக்கும். நாங்க பாட்டுகள், கதைகள்ன்னு புள்ளைங்களுக்கு பிடித்த வகையில சொல்லித் தருகிறோம். அப்புறம் அவனுக்குக் கவனம் திசைதிரும்பிடும். ஆண்டவன் பாட்டு இரண்டு, பள்ளிக்கூடப் பாட்டு இரண்டு வரின்னு போட்டுக் குழப்பிக்குவான்கிறாங்க..."

"இதெல்லாம் மாலை போடறதுக்கு முன்னாடியே சொன்னாங்களா?"

"ஆமாங்க ஐயா, இரண்டு நாளைக்கு முன்னாடியே பையனுக்கு மாலை போடப் போறோம், இரண்டு நாள் விடுப்பு வேணுன்னு கேட்டேங்க ஐயா, அப்பதான் சொன்னாங்க..."

"அது தமிழ்வழிப் பள்ளிக்கூடம்னு சொன்னீங்கல்ல..."

"ஆமாங்க ஐயா... முதல்ல தமிழிலதாங்க ஐயா சொல்லித் தருராங்க மேலப் போகப் போக ஆங்கிலமும் சொல்லித் தருகிறாங்களாம்யா"

"பள்ளிக்கூடத்துக்கே வரவேண்டாம்னு சொல்லிட்டாங்களா..."

"இல்லீங்க ஐயா.... மாலை கழட்டினுதுக்கப்புறம் கொண்டு வந்து விடுங்கன்னு சொல்றாங்க ஐயா..... இன்னும் என்னென்னமோ காரணம் சொன்னாங்க... அதான் நீங்க வந்தீங்கன்னா கொஞ்சம் பேசிச் சேர்த்துவிடுவீங்கன்னுதான்..."

"சரி..... சரி.... நான் வர்ரேன். பையன் படிப்புக் கெட்டுப் போயிடுமே... நாப்பது நாள்ல எல்லாம் மறந்துடுவானே...."

முகம், கை, கால் கழுவிக்கொண்டு சட்டையை மாட்டிக் கொண்டு பள்ளிக்கு அரைநாள் விடுப்புச் சொல்லச் சொல்லி என்னுடைய மகனிடம் எழுதிக் கொடுத்துவிட்டு மணியும் நானும் புறப்பட்டோம்.

சிறிய பள்ளிக்கூடம்தான். பள்ளிக்குரிய எல்லாமும் இருந்தன. எங்குத் திரும்பினாலும் மழலைப் பிள்ளைகளுக்குரிய பாடக்

படிப்பகம்

www.padippakam.com



கருவிகள். வாயிலில் 'கற்க கசடற'.... திருக்குறள். ஆங்காங்கே பழமொழிகள். பெரிய திருவள்ளுவர் படம்..... இப்படி, பள்ளியே நல்ல சூழலில் இருந்ததுபோல் இருந்தது. சற்று நேரம் காத்திருந்தோம். வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்த தலைமையாசிரியர் நாங்கள் வந்திருப்பதைப் பார்த்து வரவேற்றுக்கொண்டே வந்தார்.

"வாங்க, வணக்கம்.... உட்காருங்க"

"வணக்கம்..... பக்கத்து ஊர் அரசுத் தொடக்கப் பள்ளியில தலைமை ஆசிரியரா இருக்கேன். பணி முடியப் போகுது இன்னும் இரண்டு மாதம்தான்...." இவரு பையனை பள்ளியிலிருந்து நிறுத்திட்டீங்கன்னு சொன்னாங்க... அதான் விளக்கம் தெரிந்துகொண்டு போலாம்னு வந்தோம்"

"அவுங்க பையன் மட்டுமில்லீங்க ஐயா, இன்னொரு பையனை அதுமாதிரி நிறுத்தியிருக்கோம்.... சரியான விளக்கம் கொடுத்திருக்கோமே...."

"தமிழுக்கு முதன்மை கொடுத்துச் சொல்லிக் கொடுக்கறதறா கேள்விப்பட்டோம்.., ஆனா மாலை போடறதுக்கும்....".

"தமிழுக்கு முதன்மை கொடுக்கறது உண்மைதாங்க ஐயா. ஆனா அதுமட்டுமே எங்க நோக்கமில்லை. தாய்மொழியில சொல்லிக் கொடுக்கிறதால எவ்வளோ செய்திகள எளிமையாகவும் விவைரவாகவும் சொல்லிக் கொடுக்க முடியுது. அதுமட்டுமில்லீங்க, இங்க மழலைகளுக்கு விளையாட்டு முறையிலதான் சொல்லிக் கொடுக்கிறோம்.... இப்படிச் சொல்லிக் கொடுக்கிற அதேநேரம் பொதுவான சில வரையறைகளையும் வைத்திருக்கிறோம்"

"என்னென்ன வரையறை வைத்திருக்கிறீங்க?"

"குழந்தைகள் வெள்ளி, தங்க நகைகள் அணிந்து வரக்கூடாது. கண்டிப்பா சீருடையிலதான் வரணும்..... மத அடையாளங்கள் எதையும் அணிந்து வரக்கூடாது...."

"மத அடையாளம்னா...' மாலை போட்டுட்டு வரதச் சொல்றீங்களா?"

"இல்லீங்க, மத அடையாளம்னா, மாலை போட்டுகிட்டு வருகிறது மட்டுமில்லீங்க, குறுக்கு(சிலுவை) அணிந்து வருகிறது, கவிப்பு (குல்லா) போட்டுக்கொண்டு வருகிறது.... இப்படி எந்த மத அடையாளமும் அணிந்துகொண்டு வரவேணாங்கிறோம்...."

"அப்படியா... எந்த மத அடையாளமும் வேணாம்னா

படிப்பகம்

www.padippakam.com



சொல்லியிருக்கீங்க.... புதுமையா இருக்குதே.... எனக்கு உள்ளுக்குள்ள ஓர் ஐயம் இருந்தது.....

"என்னன்னு சொல்லுங்க..."

"இல்லீங்க.... நீங்க கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவங்களா இருப்பீங்களோன்னு நெனச்சேன், அதான்...."

"நாங்க எந்த மதத்தைச் சேர்ந்தவங்களா, இருந்தாலும் எங்களோட மதக் கருத்துகளை எப்படிங்க பள்ளியில திணிக்க முடியும்?"

"பல இடங்கள்ல அப்படித்தானே நடக்குது... ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவங்களும் அவுங்க நடத்தற பள்ளிகள்ல அவுங்க மதக் கருத்துகளைப் பரப்புறாங்களே!"

"அதைத்தான் நாங்க தப்புங்கறோம்.... மதவியல் கருத்துக்களும் நம்பிக்கைகளும் அவரவர்களுடைய தனிப்பட்ட கருத்தாக இருக்கலாமே ஒழியப் பொது இடங்களில் குறிப்பாகப் பள்ளிக் கூடங்களில் பரப்புவதைத் தவறு என்கிறோம். அதனாலதான் மத. அடையாளங்களைத் தவிர்க்கச் சொல்கிறோம்."

"அரசுப் பள்ளிகள் மாதிரி, எல்லா மதத்தினரும் அவரவர் மத அடையாளங்களை அணிந்து வரலாம்னு சொல்லிட்டா...."

"அது, இதைவிடச் சிக்கல உருவாக்குங்க.... புள்ளைங்கள நாமே மதவழிப் பிரிச்சு வைக்கிறவங்களா ஆயிடுவோங்க...." அதனால இப்படியான அடையாளங்களைத் தவிர்த்துவிட்டு மாணவர்களை மாணவர்களாகப் பள்ளிக்கு அனுப்புங்கன்னு சொல்றோம்."

"புரியுதுங்க.... நான் வேறு என்னமோ நெனச்சு வந்தேன். உங்க விளக்கம் உண்மையிலேயே தெளிவாக இருக்குதுங்க..... நாங்க வருகிறோம்..... நன்றிங்க!"

வணக்கம் சொல்லிவிட்டு இருவரும் புறப்பட்டோம். வரும் வழியில்....

"என்னங்க மணி.... பேசாம வருகிறீங்க...?"

"இல்லீங்க ஐயா.... நான்தான் தப்புப் பண்ணிட்டேன். அவுங்க மாலை போடறதுக்கு முன்னாடியே இதெல்லாம் சொன்னாங்கதான். நான்தான் புரிஞ்சுக்காம பள்ளிய விட்டா நிறுத்திடப் போறாங்கன்னு மாலையைப் போட்டுவிட்டுட்டேன்..."

"சரி.... நடந்தது நடந்துபோச்சு.... அவரு சொன்னது எல்லாம் உங்களுக்குப் புரிஞ்சுதா...?

படிப்பகம்

www.padippakam.com



"நல்லாவே புரியுதுங்க ஐயா.... அதுதான் ஒரு முடிவும் பண்ணிட்டேன். ஒரு பத்து நாளைக்கு மட்டும் நோன்பு இருக்க வைத்துப் பையனுக்கு இங்கேயே ஒரு கோயில்ல மாலைய கழட்டிவிட்டுப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிடலாம்னு இருக்கேங்க ஐயா.... அதுமட்டுமில்லீங்க ஐயா. அவன் பெரியவன் ஆகி அவனுக்கா புரிஞ்சு, உணர்ந்து செய்யட்டும். அதுவரைக்கும் என்னோட தனிப்பட்ட மதக் கருத்துகள் எதையும் அவனை ஏத்துக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்துறது இல்லைன்னும் முடிவு பண்ணிட்டேங்க ஐயா...."

"உண்மையிலேயே, உங்களோட முடிவு எனக்கு நிறைவா இருக்குதுங்க மணி.... நீங்க சொல்றததான் நானும் நெனச்சுக்கிட்டே வந்தேன்... நீங்களா அதைச் சொன்னதுல மிக்க மகிழ்ச்சிங்க மணி..."

காலையில் இரண்டு மாதம் கழித்து, பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்பு என்ன செய்யப் போகிறோம் என்கிற கேள்விக்கு ஒரு விடை கிடைத்ததில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. ஓய்வு பெற்றபின் சொந்த ஊருக்குச் சென்று இதைப் போலவே ஒரு பள்ளியைத் தொடங்கிவிடுவது என்று முடிவு செய்தேன்.

*


# தென்மொழி

(தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்)

**கட்டண விளக்கம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் (மலர் உட்பட) | உரு. 70.00 |
| வாழ்நாள் கட்டணம் | உரு. 700.00 |
| தனி இதழ் | உரு. 5.00 |

**வெளிநாட்டுக் கட்டணம்**

| | |
|---|---|
| வானூர்தி வழி ஆண்டுக் கட்டணம் | உரு. 400.00 |
| கப்பல் வழி ஆண்டுக் கட்டணம் | உரு. 300.00 |

**ஆசிரியர்: தாமரை பெருஞ்சித்திரனார்**

**அனைத்துத் தொடர்புகளுக்கும்:**

**'தென்மொழி'** செந்தமிழ் அடுக்ககம், (சி.கே. பிளாட்சு)
மேடவாக்கம் கூட்டுச்சாலை, சென்னை – 601 302.
தொலைபேசி : 239 0231


படிப்பகம்

www.padippakam.com

# செய்திகள்

**புதுக்கோட்டைக் கவின்பணிஞன் மறைவு!**

தென்மொழி அன்பரும் இனவுணர்வாளருமான புதுக்கோட்டைக் கவின்பணிஞன் அவர்கள் கடந்த துலை 21 அன்று (7.11.'99) இயற்கையெய்தினார் என்பதறிந்து பெரிதும் துயருறுகிறோம்.

பாவலரேறு ஐயா அவர்களால் 'கவின்பணிஞன்' என்று பெயர் சூட்டப்பட்ட அவர் (இராமதாசு) தென்மொழியைப் பரப்பும் முயற்சியினைத் தொண்டாக மேற்கொண்டு செய்துவந்தார்.

அவர்தம் பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கும் அன்பர்களுக்கும் தென்மொழி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

புதுக்கோட்டை இரா. பாவாணன் (ம.தி.மு.க.), புட்பநாதன் (தி.க.), புலவர் மதிவாணன், கே.எம். செரீபு (ம.தி.மு.க.), பேரா. மணி. மி.ச. மாரிமுத்து, இராமதாசு (திருக்குறட் பேரவை), புலவர் திருப்பதி, இமை. சுரேசு, செல்லப்பன் முதலானோர் கவின்பணிஞனின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

**தமிழகப் பெருவிழா — சென்னை.**

தமிழக மக்கள் ஒன்றியத்தின் சார்பில் தமிழகப் பெருவிழா — தமிழின உரிமை விளக்கப் பொதுக்கூட்டம் தி.பி. 2030 துலை 24 அன்று (10.11.'99), சென்னை — தேனாம்பேட்டையில் திரு. நீலவேங்கை ப. பாலச்சந்தர் தலைமையில் நடைபெற்றது. கோ. பிரபாகரன் வரவேற்புரையாற்றினார்.

முனைவர் அரு. கோபாலன், புலவர் இறைக்குருவனார், திரு. நா. அருணாசலம், பாவலர் இராமச்சந்திரன், பாவலர் அ.சி. சின்னப்பா, மதுரவாயில் பதுமநாபன், திருவாளர்கள் மு. அரசெழிலன், குரு. சுப்பராயன், கி. மகேசு முதலானோர் உரையாற்றினர். சு. தமிழரசன் நன்றி நவின்றார்.

**வள்ளுவன் — கலைச்செல்வி வாழ்க!**

தென்மொழி அன்பர் நெல்லை – தாழையூத்துத் திரு. மா. அனந்தையா – செபமாதுரியம் மகன் திருவள்ளுவர் செல்வன் வள்ளுவனுக்கும், தளபதி சமுத்திரம் திரு. பெ. சிதம்பரம் – வேலம்மாள் மகள் திருவள்ளுவர்செல்வி கலைச்செல்விக்கும் தி.பி

படிப்பகம்

www.padippakam.com



2030 நளி 2 அன்று (18.11.'99) தாழையூற்றில் திரு. மு. இசுமத்துல்லாகான் தலைமையிலும் திரு. நீ. பாற்கரன் முன்னிலையிலும் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் பன்னலமும் பெற்று நீடுவாழ்க!

**கொலைத் தண்டனை ஒழிப்பு —மாந்தநேயப் பேரணி — சென்னை**

இந்திய உச்சநெறி மன்றத்தால் கொலைத் தண்டனை யளிக்கப் பெற்றுள்ள நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர்க்கு அத் தண்டனையைத் தளர்த்தக் கோரியும், இந்திய அரசு கொலைத் தண்டனை முறையை முற்றிலும் கைவிடக் கோரியும் மாபெரும் மாந்தநேயப் பேரணி, கடந்த நளி 14 அன்று (30.11.'99), சென்னையில், தமிழீழ ஆதரவாளர் கூட்டமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அன்று (30.11.'99) காலை 10 மணியளவில் சென்னை - அண்ணாசாலை அண்ணா சிலையருகில் தமிழ்நாடு எங்கணுமிருந்து பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தோரும், தமிழ் இன வுணர்வாளர்களும், மாந்தநேய உணர்வாளர்களும் அணியணியாக வந்து குழுமிய வண்ணமிருந்தனர்.

ஓராயிரம் தாய்மார்கள் உட்படப் பன்னீராயிரம் பேருக்குமேல் திரண்ட எழுச்சிமிகு மாந்தநேயப் பேரணி, காலை 11 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டுக் கொலைத் தண்டனையைக் கைவிடக் கோரும் முழக்கங்களை எழுப்பியவாறு கோட்டை நோக்கிச் சென்றது. அரசு விருந்தினர் மாளிகையின் அருகில் பேரணி தடுத்து நிறுத்தப்பட்டு, நிகராளியர் முதலமைச்சரைச் சந்திக்க அழைக்கப் பெற்றனர்.

பழ. நெடுமாறன் தலைமையில் முனைவர் சாலினி இளந்திரையன், வே. ஆனைமுத்து, ஆனூர் செகதீசன், புலவர் இறைக்குருவனார், பெ. மணியரசன், கார்முகில், தியாகு, கோவை. இராமகிருட்டிணன், பண்ணுருட்டி இராமச்சந்திரன், எசு.வி. இராசதுரை, இயக்குநர் சேகர், மெல்கியோர், சந்திரேசன், சந்திரசேகரன் ஆகியோர் முதலமைச்சரைச் சந்தித்துப் பேரணியின் கோரிக்கையை எடுத்துரைத்தனர். முதலமைச்சர் பரிவுடன் செவி சாய்த்து ஆவன செய்வதாக மொழிந்தார்.

தென்மொழி ஆசிரியர் அம்மா தாமரைபெருஞ்சித்திரனார், ஏராளமான தென்மொழி அன்பர்களும் பேரணியில் கலந்து கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



## முதுபெரும்புலவர் வி.பொ. பழனிவேலனார் 90ஆம் அகவை நிறைவு விழா — தஞ்சை

முதுபெரும்புலவர் வி.பொ. பழனிவேலனார் அவர்களின் 90ஆம் அகவை நிறைவு விழா தி.பி 2030 நளி 15 அன்று (1.12.'99) மாலை, தஞ்சைப் பெசண்டு அரங்கில் முனைவர் இரா. இளவரசு தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

முனைவர் மு. இளமுருகன் வரவேற்புரை யாற்றினார். புலவர் இறைக்குருவனார் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

திருத்துறைக்கிழார் வி.பொ.ப. எழுதிய 'திருக்குறள் தேர்பொருளுரை' என்னும் நூலை முனைவர் சாலினி இளந்திரையன் வெளியிட, அதன் முதற்படியைத் தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனர் திரு. நா. அருணாசலம் பெற்றுக் கொண்டார். திரு. வி.பொ.ப.வின் 'தமிழ் இலக்கியச் சொல் அகரமுதலி' என்னும் நூலைத் 'தமிழ்ப் பாவை' இதழாசிரியர் மதுரை அருளாளன் வெளியிட அதன் முதற்படியைச் சட்டமன்ற உறுப்பினர் தஞ்சை உபயதுல்லா பெற்றுக்கொண்டார்.

தென்மொழி அவையம், தமிழியக்கம், தமிழ்ச் சான்றோர் பேரவை, 'திருவள்ளுவர் திருமன்றம்' முதலான அமைப்புகளின் சார்பிலும் திரு. தங்கத்தமிழன், திரு. பொன். மாறன் முதலான அன்பர்கள் சார்பிலும் திரு. வி.பொ.ப.வுக்கும் அவர்தம் இல்லத்தரசியார் தில்லையம்மாளுக்கும் நேரியல்(சால்வை)களும், மாலைகளும் அணிவித்தும், பழங்களும் காசுகளும் நிரம்பிய நிலை வெள்ளித் தட்டுகள் வழங்கியும் சிறப்புச் செய்யப் பெற்றது.

முனைவர் சாலினி இளந்திரையன், திரு. அருளாளன், சட்டமன்ற உறுப்பினர் திரு. உபயதுல்லா, திரு. நா. அருணாசலம், பேரா. ம.இலெ. தங்கப்பா, பேரா. பி. விருத்தாசலம், முனைவர் பா. வளனரசு, திரு. பெ. மணியரசன் (த.தே.பொ.க.), புலவர் கி.த. பச்சையப்பன், திருவள்ளுவரடிமை முருகு, 'தெளிதமிழ்' மு. இறைவிழியன், முனைவர் அரணமுறுவல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திரு. வி.பொ.ப. ஏற்புரையாற்றினார். முனைவர் தமிழ்ப்பாவை நன்றி நவின்றார்.

சொல்லாய்வு அறிஞர் அருளியார், புலவர் தமிழரங்கன், துறையூர்த் தமிழ்நெஞ்சன், திரு. அருமருந்தலைவன், சுதிர். தமிழ்வாணன், அரசிறைவன், இள்வழகன் உள்ளிட்ட வெளியூர் உள்ளூர் அன்பர்கள் விழாவுக்குத் திரளாக வருகை தந்திருந்தனர்.

❋

படிப்பகம்

www.padippakam.com

# நூல் அறிமுகம்

**மனிதரைக் காக்கவா மதம்?**

ஆசிரியர்:
பேரா. பெரியார்தாசன்

வெளியீடு:
சூலூர் – பாவேந்தர் பேரவை
38, கலங்கல் பாதை
சூலூர், கோவை - 641 402.

விலை : உரு. 5.00

'எச்சரிக்கை' என்னும் பெயரில் வெளிவந்த சொற்பொழிவு நூலின் ஒருபகுதி மறுபதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

**ஆசிரியப் பணியில் நான்...**

ஆசிரியர்:
சாலினி இளந்திரையன்

வெளியீடு:
11, திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை - 86.

விலை உரு. 25.00

"என் ஆசிரியப் பணியையும், படைப்பு முயற்சியையும் இணைத்து ஆக்கப்பெற்ற நூல் இது". நூலில் உள்ள இரண்டு கட்டுரைகளில் ஒன்று 'ஆசிரியப் பணியில் நான்.." — என்பது மற்றது.

இரண்டின் வழி சாலினி அம்மையார் அவர்கள் தம் வாழ்க்கைச் சுவடுகளின் பட்டறிவுகளால் பதியவைத்திருக்கிறார்கள்.

**புலம்பெயர்ந்த தமிழர்களின் கேள்விகள்**

ஆசிரியர்:
பழ. நெடுமாறன்

நன்கொடை: உரு. 2.00

**தாய்வீட்டில் தத்தளிக்கும் சேய்கள்**

ஆசிரியர்:
பழ. நெடுமாறன்

நன்கொடை: உரு. 1.00.

**ஈழுக உலகத் தமிழினம்**

ஆசிரியர்:
பழ. நெடுமாறன்

நன்கொடை: உரு. 1.00.

கிடைக்குமிடம்:
17/1, நரசிம்மபுரம்,
மயிலார்ப்பூர்,
சென்னை - 600 004

"இம் மூன்று சிறுவெளியீடுகளும் ஈழத் தமிழ் ஏதிலியரின் வாழ்க்கைத் தொல்லைகளையும் தமிழீழ விடுதலைத் தொடர்பான விளக்கங்களையும் உள்ளடக்கியன.

படிப்பகம்

www.padippakam.com



**வல்லினம் மிகுதலும் மிகாமையும்**

ஆசிரியர்:
திருக்குறள்மணி
புலவர் இறைக்குருவனார்

வெளியீடு:
நூழில் பதிப்பகம்,
183, வெங்கடரங்கம் தெரு,
சென்னை - 600 005.

விலை : உரு. 5.00

*"தமிழைப் பிழையின்றிச் செம்மையாக எழுத வேண்டும் என்னும் விழைவுடையோர்க் கெல்லாம் இக் கையடக்க நூல் பெரிதும் பயன்படும்."*

**தமிழகத்தில் மொழிப்போர் கி.பி. 1800**

ஆசிரியர்:
பாவலர் செவ்வியன்

வெளியீடு:
கோதை பதிப்பகம்,
311-5ஆம் தெற்குக்
குறுக்குத் தெரு,
கபாலீசுவரர் நகர்,
நீலாங்கரை, சென்னை - 41.

விலை உரு. 50.00

*"தமிழ் இயக்கங்கள் பற்றி ஆயும் நூலாகவும், மேலும் விரிவான ஆய்விற்குத் தூண்டும் நூலாகவும் அமைந்திருக்கிறது இந்நூலின் பெருமை"*

**மூவர் முத்தமிழ்**

ஆசிரியர்:
புலவர் வே. பிரபாகரன்

வெளியீடு:
அழகம்மைப் பதிப்பகம்,
ஆர். 56/11, கோட்டூர்புரம்,
சென்னை - 85.

நன்கொடை: உரு. 40.00

*வேதநாயகம், தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், பரிதிமாற் கலைஞர் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் — அடங்கிய நூல்.*

**இனிக்கப் பேச இன்றமிழ்**

வெளியீடு:
புதிய சிறகுகள்
இலக்கிய இயக்கத்தார்
21, சதாசிவம் வீதி,
உடுமலைப்பேட்டை - 642 126.

*நடைமுறை வாழ்வில் நாம் புழங்குகிற பல்வேறு வேற்று மொழிச் சொற்களுக்கேற்ற தூயதமிழ்ச் சொற்பட்டியலடங்கிய சிறு வெளியீடு.*

படிப்பகம்

## மணிவாசகர் பதிப்பகம்

6/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.

நிறுவனர் : தமிழவேள் ச. மெய்யப்பன்

வெளியீடுகள் : 700; பல்கலைக்கழகப் பாட நூல்கள் : 60
பரிசு பெற்ற நூல்கள் : 55

- தமிழ்நாட்டில் தலைசிறந்த பதிப்பகங்கள் ஐந்தில் ஒன்று.
- தரமான நூல்களின் தாயகம்
- செம்பதிப்புகள், கருத்துக் கருவூலங்கள், ஆராய்ச்சி நூல்கள், அறிவு நல்கும் அமுதசுரபிகள், சிந்தனைப் பதிவேடுகள், நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்.
- சிறந்த அமைப்புடையவை, சீரான விலையுடையவை.

/விளம்./

தொலைபேசி எண்கள்
அலுவலகம் : 253623; 257152; 252265
இல்லம் : 210265

## பாண்டியன் முகவாண்மை

## PANDIAN AGENCY

நந்தி (JSJ) மற்றும் சலா (JALA PVC) குழாய்கள்
மொத்த விற்பனையாளர்

பெரியார் மாவட்ட ஏற்பிசைவு(அங்கீகாரம்) பெற்ற
ஒரே விற்பனையாளர் நந்தி (JSJ) பிவிசி குழாய்கள்
கிசான் பிவிசி பொருத்திகள் (PVC Fittings)

557, சத்தி சாலை,
ஈரோடு - 638 003.

/விளம்./

www.padippakam.com



உலகத் தமிழர்களை
ஒருங்கிணைக்கும் ஏடு

நந்தன்

வழி

படியுங்கள்

சிறப்பாசிரியர்
சுப. வீரபாண்டியன்

ஆசிரியர்
நா. அருணாசலம்

முகவரி:
9, நூறடி சாலை,
சென்னை - 26
தொலைநகல் (ஃபேக்சு) 4849913

படிப்பகம்

www.padippakam.com



# தமிழரின் தொன்மை

தமிழன் பிறந்தகமும் பழம்பாண்டி நாடுமாகிய தென்பெரு நிலப்பரப்பு மூழ்கிப் போனமையால், தொல்பொருளியற் சான்று (Archaeological evidence) இன்று அறவே இல்லாததாயிற்று. நீலமலை, ஆனைமலை, சேரவரையன்மலை முதலிய மலைகளிலுள்ள இற்றைப் பழங்குடி மாந்தரெல்லாம், கொள்ளைக்கும் போருக்குந் தப்பிக் கீழிருந்து மேற்சென்றவரே. அவர் மொழிகளெல்லாம், செந்தமிழ்ச் சிதைவான கொடுந்தமிழுங் கொச்சைத் தமிழுமே யன்றிக் குமரி நாட்டுத் தமிழ் வளர்ச்சி காட்டும் முந்துநிலைகளல்ல. கற்றார் தொடர்பும் நாகரிக மக்களுறவு மின்மையால், மலைநிலத்திற் கேற்றவாறு அவர்களின் வாழ்க்கைநிலை தாழ்ந்துள்ளது. தமிழரின் கற்கால நிலையெல்லாம் குமரி நாட்டிலேயே கழிந்துவிட்டது. எந்தக் காலத்திலும், நாகரிக மக்கள் வாழும் நாட்டில் அநாகரிக மாந்தரும் வதியலாம். நாகரிகம் மிக்க இவ்விருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும், தமிழ்நாட்டு வேட்டுவப் பெண்டிர் தழையுடையும் மலையாள நாட்டுத் தந்தப் புலைமகளிர் கோரை யுடையும் அணிந்திருந்தனர். இதனால் தமிழப் பெண்டிர் அனைவரும் அங்ஙனமே அணிந்திருந்தனர் என்று கூறிவிட முடியாது. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே, பஞ்சு மயிர் பட்டுநூலால் நூற்றுக் கணக்கான ஆடைவகைகள் தமிழகத்தில் நெய்யப்பட்டன. ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு, சிறந்த ஆடை வகைகளெல்லாம் தமிழகத்தினின்றே மேலை நாடுகட்கு ஏற்றுமதியாயின.

துடவரையும் கோத்தரையும் முந்தியல் (Primitive) தமிழராகக் கொண்டு, நீலமலையைத் தமிழன் பிறந்தகம் போலப் பேரா. எக்கேல் (Haeckel) கூறுவதும், திரு. புரூசுபூட்டு(Bruce Foote) தொகுத்த பழம்பொருட்களைக் கற்காலத் தமிழர் கருவிகளுங் கலங்களுமென்று கருதுவதும், இங்ஙனமே ஆதிச்சநல்லூர் முதலிய பிறவிடத்துப் பொருள்களை மதிப்பிடுவதும், தமிழின் தொன்மையறியார் தவறாகும். மலைவாழ் குலத்தாரெல்லாம் முந்தியல் மாந்தரல்லர். புதைந்து கிடக்கும் கற்கருவிகளெல்லாம் கற்காலத்தன வல்ல. கடைக் கழகக் காலத்தில், ஓரி பாரி முதலிய சிற்றரசரும் அவர் படையினருமாகிய நாகரிக மக்களே, பறம்பு கொல்லி முதலிய மலைகளை அரணாகக் கொண்டு, அவற்றின்மேல் வாழ்ந்திருந்தமையை நோக்குக. தென்மாவாரியில் மூழ்கிக் கிடக்கும் குமரிமாநிலம் மீண்டும் எழுந்தாலொழிய, கற்காலத் தமிழரின் கருவிகளைக் காணமுடியாது. இன்று கிடைக்கும் கற்கருவிகளெல்லாம் பிற்காலத்துக் காடுவாழ் குலங்கள் செதுக்கிப் பயன்படுத்தினவையே.

—மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்
(தமிழர் வரலாறு என்னும் நூலிலிருந்து)

படிப்பகம்

www.padippakam.com

த.நா.செ. (ரு) மா. 7211/99 செ.ப.(ஆர்.என்.) எண் : 8119/63 தென்மொழி

அணியமாகிக் கொண்டிருக்கிறது...!

# தென்மொழி நாள்காட்டி




தனிப்படி ஒன்றின் விலை : உரு. 20.00
(பதிவஞ்சலில் பெற உரு. 20.00 சேர்த்து அனுப்புக)

உங்கள் படிகளுக்கு
உடனடியாகப் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

தொடர்புக்கு:

'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை, மேடவாக்கம்,
சென்னை – 601 302.
தொலைபேசி எண் : 239 0231



படிப்பகம்